பக்கங்கள் : 16+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 24 வெள்ளிக்கிழமை (07.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :131

# வன்னியிலிருந்து சமாதானப் பேச்சுக்கு புலிகள் தமது சொந்த விமானத்தில் புறப்படவும் தயார்!

கொழும்பு,ஏப்.7

அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்குச் செல்லும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவின் கொழும்பு ஊடான பயணத்துக்கு உரிய பாதுகாப்பு உத்தரவாதத்தை இலங்கை ஜனாதிபதியால் வழங்க முடியாமல்போனால் -

தமது சொந்த விமானத்தில் வன்னியிலிருந்து புறப்பட்டு மாலைதீவின் தலைநகர் மாலேயில் இறங்கி, அங்கிருந்து ஜெனீவா செல்லவும் விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்கள்.

பிரபல அரசியல் விமர்சகர் டி.பி.எஸ்.ஜெயராஜ் நேற்று முன்தினம் தாம் வரைந்த கட்டுரை ஒன்றில் இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

வன்னியில் இரணைமடுவிலிருந்து புறப்பட்டு மாலே செல்லவும் அதேவழியில் திரும்பவும் புலிகள் தயார் என அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

தமது இணையத் தள சஞ்சிகையில் ஜெயராஜ் எழுதியுள்ள மேற்படி கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

புலிகள் தமது சொந்த விமானத்தில் புறப்படுவது இரண்டு விடயங்களில் தங்கியுள்ளது.

ஒன்று - புலிகளின் பேச்சுக்குழு(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனீவா அருகே நியோனில் ஹோட்டலில் இம்முறை பேச்சு

## வெவ்வேறு தளங்களில் இருதரப்பினரையும் தங்கவைப்பதற்கும் அதிகாரிகள் ஏற்பாடு

கொழும்பு,ஏப்ரல்7

**இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சை சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரிலிருந்து சற்றுத் தொலைவில் - ஏரிக்கரைப் பிரதேசமான நியோனில் உள்ள - ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடத்துவதற்கான ஒழுங்குகளை சுவிஸ் அதிகாரிகள் செய்து வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.**

**பேச்சுக் காலத்தில் சம்பந்தப்பட்ட ஹோட்டலிலேயே வெவ்வேறு தளங்களில் உள்ள மாடிகளில் அரசின் பிரதிநிதிகளையும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுவதாக அறியவந்தது.**

நியோன் நகரில் நீரேரியை ஒட்டிக் கட்டப்பட்டுள்ள லா பார்கரோல் (**La Bar - carolle**) என்ற ஹோட்டலில் பெரும்பாலும் இந்தப் பேச்சுகள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுவிஸ் அதிகாரிகள் இந்த ஹோட்டலுக்கு நேரில் விஜயம் செய்து பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து ஹோட்டல் நிர்வாகத்தோடும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புகளோடும் பேசியிருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

உத்தேச ஒழுங்குத் திட்டத்தின்படி-

இந்த ஹோட்டலின் நில மாடி அறைகளில் விடுதலைப் புலிகளும் -

முதலாவது மாடியில் நோர்வே அனுசர (16ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு குழுத் தலைவர் கிளிநொச்சிக்கு!

கிளிநொச்சி,ஏப்.7

வடக்கு - கிழக்கில் தற்போது உருவாகியுள்ள நெருக்கடிநிலை குறித்து ஆராய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் உல்ப் ஹென்றிக்ஷன் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிக்கு வருகின்றார். அன்று அவர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவுடன் கலந்துரையாடுவார்.

ஜெனீவாவில் எட்டப்பட்ட இணக்கப் பாட்டின் அமுலாக்கம், ஒட்டுக்குழுக்களின் நடவடிக்கைகள் உட்படப் வேறு விடயங்கள் குறித்து இப்பேச்சில் ஆராயப்படவிருக்கின்றது.

கடந்த 27ஆம் திகதி முதல் தடவையாக வன்னி வந்த அவர் மரியாதை நிமித்தம் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். (க-3)

## சொல்ஹெய்ம், போவர் மஹிந்தவுடன் பேச்சு

கொழும்பு,ஏப்.7

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அடுத்த கட்ட அமைதிப் பேச்சுகள் குறித்து இலங்கை அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் விரிவான பேச்சுகளை நடத்தியிருக்கிறார்.

அலரிமாளிகையில் நேற்றுக்காலை நடைபெற்ற இரண்டரை மணி நேரப்பேச்சில், இலங்கை அமைதி முயற்சிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள நோர்வேயின் புதிய விசேட பிரதிநிதி ஜோன் ஹன்ஸன் போவர், அரசசமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித (16ஆம் பக்கம் பார்க்க)

# வணிகர் சங்கப் பெயரில் படையினர் நடத்தும் விளையாட்டுப் போட்டியைப் புறக்கணிப்பீர்!

## பொங்கியெழும் மக்கள் படை வேண்டுகோள்

சாவகச்சேரி வணிகர் சங்கத்தின் பெயரால் சிறிலங்கா படையினர் நடத்தும் புத்தாண்டு விளையாட்டுப் போட்டியை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படையினர் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக மக்கள் படையின் பெயரால் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்களை திசை திருப்பும் நோக்குடன் சிறிலங்கா படையினர் சாவகச்சேரி வணிகர் சங்கத்தின் பெயரைப் பயன்படுத்தி புத்தாண்டு தினத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்த பகீரத முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ் மக்களை நாள்தோறும் சொல்லொணாத் துன்ப துயரத்திற்கு உட்படுத்திப் படுகொலைகளிலும், பாலியல் வல்லுறவுகளிலும் ஈடுபட்டு வரும் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளும் அவற்றுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப் படைகளும் செய்துவரும் அக்கிரமங்களை தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை.

இந்நிலையில் விளையாட்டுப் போட்டி என்ற பெயரால் தமிழ் மக்களை ஏமாற்றும் நடவடிக்கையில் சிங்களப் (16ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பயணப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கினார் மஹிந்த

ஜெனீவாப் பேச்சுக்கு செல்லும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவின் கொழும்பு ஊடான பயணப் பாதுகாப்புக்கு முழு உத்தரவாதம் வழங்கியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று தம்மைச் சந்தித்த நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்மிடமும், விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவரிடமும் இந்த உத்தரவாதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக - வாய்மூல உறுதிமொழியாக - வழங்கியிருக்கின்றார்.

நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் கொழும்பில் உள்ள வெளிநாட்டு ஊடகங்களின் செய்தியாளர்களை நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்தார்.

அப்போதே ஜனாதிபதி இந்த உறுதிமொழி வழங்கியிருக்கின்ற தகவலை எரிக் சொல்ஹெய்ம் வெளியிட்டார்.

"தமது அணியின் பயணப் பாது காப்புத் தொடர்பாக இலங்கை அரசிடம் மட்டுமல்லாமல், நோர்வேயிடமும் புலிகள் உத்தரவாதம் கோரியிருந்தனர். ஆனால், அந்த உத்தரவாதத்தை நோர்வே வழங்க முடியாது. அனுசரணைப் பணி செய்யும் நோர்வே அத்தகைய உத்தரவாதத்தை வழங்க இயலாது. ஆனால், இலங்கை அரசுத் தலைவர் அந்த உத்தரவாதத்தை வழங்கி இருக்கின்றார்." - என்று அப்போது குறிப்பிட்டார் சொல்ஹெய்ம்.(க)

# திருநெல்வேலியில் இரவிரவாக கொள்ளையர்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணிமுதல் நேற்று அதிகாலை 2 மணிவரை கொள்ளைக் கோஷ்டி ஒன்று இஷ்டப்படி அட்டகாசம் புரிந்துள்ளது.

சுமார் 10 பேர் அடங்கிய இக்கொள்ளைக் கும்பல் வாள்கள், கத்திகள் போன்ற ஆயுதங்களுடன் முகங்களை துணியால் மூடிக் கட்டியபடி வந்ததாகக் கூறப்படுகிறது.

இக் கும்பல் நேற்றுமுன்தினம் இரவு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக உள்ள வீடொன்றுக்குள் புகுந்தது. அங்கிருந்தவர்களை மிரட்டி நகைகள் உட்பட பெறுமதியான பொருள்களையும் பணத்தையும் சுருட்டியது. பின்னர் தபால் பெட்டி வீதியில் உள்ள வீடொன்றுக்குள் சென்றது. வீட்டில் இருந்தவர்களை மிரட்டிப் புகுந்த கொள்ளையர்கள் அங்கும் நகைகள் பணம் போன்றவற்றை அபகரித்தனர்.

அதன் பின்னர் அருகே இருந்த மற்றொரு வீட்டுக்குள் நுழைய முயற்சித்த கொள்ளையர்கள் அது பயனளிக்காது போகவே ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து அட்டகாசம் புரிந்தனர். அங்கிருந்து பலாலி வீதியைக் கடந்து மறுபுறமுள்ள ஒழுங்கைக்குள் சென்ற கொள்ளையர்கள் மாரியம்மன் வீதியிலுள்ள ஒரு வீட்டிற்குள் நுழைய முயற்சித்தனர். வீட் (16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இரவுக் காவலாளி தாக்கப்பட்டதைக் கண்டித்து

# பருத்தித்துறை வைத்தியசாலையில் நேற்று அடையாள வேலைநிறுத்தம்

வடமராட்சி,ஏப்.7

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை இரவுக் காவலாளி இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவு ஊழியர்களும் நேற்று முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை இரண்டு மணிநேரம் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால், அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த அனைத்துப் பிரிவுகளும் ஸ்தம்பிதமடைந்தன. சிகிச்சைபெற வந்த வெளிநோயாளர்கள் சிகிச்சைபெற முடியாது வைத்தியசாலை வளாகத்தில் காத்திருந்தனர்.

பருத்தித்துறையில் விபத்துக்குள்ளாகி இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அன்று இரவு சுமார் அரைமணி நேரத்தின்பின் மதுபோதையில் அங்குவந்த சிலர் அவரைப் பார்க்க வேண்டும் எனக் கூறி அவசர சிகிச்சைப் பிரிவு வாசல் கதவைத் தட்டித் திறந்துகொண்டு உள்ளே செல்ல முற்பட்டனர். அவ்வேளை அங்கு கடமையிலிருந்த இரவுக் காவலாளி அவர்களைத் தடுத்தார். இதனால் அவர்கள் காவலாளியைத் தாக்கினர்.

இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், பரிசாரகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களும் ஒன்று திரண்டு நேற்று முற்பகல் 10 மணியளவில் பிரதான நுழைவாயிலில் ஒன்றுகூடி, உட்செல்லும் பிரதான வாயில்களை மூடி அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வேலைநிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் பருத்தித்துறைப் பொலீஸார் அங்குவந்து விசாரணைகளை மேற்கொண்டு கடமையிலிருந்த வைத்திய அதிகாரி, தாதிய உத்தியோகத்தர், காவலாளி ஆகியோரின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தனர்.

வேலைநிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் அவசர சிகிச்சைப் பிரிவு மாத்திரம் செயற்பட்டது. இரண்டு மணி நேரத்தில் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்து வைத்தியசாலைப் பணிகள் யாவும் வழமைக்குத் திரும்பின. (ஒ-173) (25)

## பருத்தித்துறை வைத்தியசாலையில் பற்சிகிச்சை நிறுத்தம்

வடமராட்சி,ஏப்.7

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவு அவசர திருத்த வேலைகள் காரணமாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் மூடப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் பூர்த்தியடைய ஒரு வார காலம் ஆகுமென வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதன் பின்னர் பற்சிகிச்சை பிரிவு வழமைபோல இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-173) (25)

## செஞ்சிலுவை கிளை அலுவலகம் இடமாற்றம்

வலி.தென்மேற்கு,ஏப்.7

வட்டுக்கோட்டை மாவடி சந்திக்கு அருகிலுள்ள கட்டடத்தில் இயங்கிவந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட வலிகாமம் மேற்குப் பிரிவுக் கிளை அலுவலகம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு சமீபமாக - தெல்லிப்பளை வீதியிலுள்ள கட்டடத்துக்கு கடந்த மாதம் முதல் மாற்றப்பட்டுள்ளது. (ஒ-135)(25)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பெறுபேறுகள் புதுவருடத்தின் பின்பே வெளியாகும்

கொழும்பு,ஏப்.7

ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்குப் பின்னரே வெளியாகும் என்று பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற இப்பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த மாத இறுதியில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் உள்ளூராட்சித் தேர்தலைக் காரணம் காட்டி இவ்வாரம் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்குப் பின்னரே வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-13)

# ஆன்மீகக்குரு ரவிசங்கர் பங்கேற்கும் சத்சங்கமம் இன்று யாழ்.இந்துவில்

யாழ்ப்பாணம்,ஏப்.7

ஆன்மீகக்குரு ரவிசங்கர் பங்கேற்கும் மகா சத்சங்கம நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில்இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பங்கேற்பதற்காக குரு ரவிசங்கர் இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார். முற்பகலில் பல்வேறு நிகழ்வுகளில் அவர் கலந்துகொள்கிறார்.

பிற்பகலில் நல்லூர் ஆலயத்திலிருந்து மகா சத் சங்கம நிகழ்வு இடம்பெறவுள்ள யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு ஊர்வலமாக அவர் அழைத்துவரப்படவுள்ளார்.

தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமையவுள்ள இந்த ஊர்வலத்தில் ஆயிரம் மாணவர்கள் ஆன்மீக இசை வழங்கவுள்ளனர். (ஒ)(25)

# ஐ.தே.க. செயற்குழுக் கூட்டம் இன்று

மிகவும் பரபரப்பான நிலையில் இன்று கூடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு, கட்சிக்குள் எழுந்திருக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கவிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் செயற்குழுக் கூட்டம் இன்று கட்சித் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜேசேகரவிற்கு கட்சியில் வழங்கப்பட்டிருந்த பதவிகள் பறிக்கப்பட்டமை, கொழும்பு மாநகரசபைத் தேர்தல் வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கான காரணகர்த்தாக்களெனக் கருதப்படும் உறுப்பினர்களுக்கெதிரான நடவடிக்கை, கட்சியிலிருந்து ஆளுந்தரப்பிற்குச் சென்ற உறுப்பினர்களுக்கு எதிரான நடவடிக்கை என்பன குறித்து இன்றைய கூட்டத்தின்போது விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

மேற்கண்ட விடயங்கள் குறித்து கட்சித் தலைமையிடம் கேள்வியெழுப்புவதற்கு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தயாராகியிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது. (க)

# கல்லுண்டாய் பகுதியில் மணல் அகழ்வு; கடல் தண்ணீர் உட்புகுமென அச்சம்

நவாலி,ஏப்.7

கல்லுண்டாய் கடற்கரைப் பகுதியில் மணல் அகழப்படுவதால் கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

உரிய அதிகாரிகளிடம் இது குறித்து முறையிட்ட போது, மணல் அகழ்ந்து ஏற்றிச் செல்லும் வாகனங்களின் பதிவு இலக்கங்களைத் தருமாறு கூறப்படுவதாகவும் -

ஆனால், இருள் சூழ்ந்த வேளையிலேயே மணல் அகழ்வு இடம்பெறுவதாலும் அச்சம் காரணமாகவும், வாகன இலக்கங்களை குறிப்பெடுக்க முடியாதுள்ளதாகவும் -

பொதுமக்கள் மேலும் தெரிவித்தனர்.

மணல் அகழ்வு தொடர்ந்தால் கடல் நீர் உட்புகுவது மட்டுமன்றி, அடுத்துள்ள வயல்களும் பாதிக்கப்படலாமென்று விவசாயிகள் கூறுகின்றனர். அத்துடன், இப்பகுதியில் உள்ள நன்னீர் கிணறுகளும் உவர் நீராக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-100)(25)

# ரணில் அமெ.செல்கின்றார்!

கொழும்பு,ஏப்.7

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அடுத்த வார முற்பகுதியில் அமெரிக்காவிற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.வாஷிங்ரனில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு.புஷ் வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸ், தெற்காசிய விவகாரங்களுக்கான துணைச்செயலர் நிக்கலஸ் பேர்ன்ஸ் ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்களை இந்த விஜயத்தின்போது ஐ.தே.க. தலைவர் சந்திக்கவுள்ளார்.

இலங்கையின் அரசியல் நிலைவரம் மற்றும் அமைதி முயற்சிகள் குறித்து ஐ.தே.கட்சியின் தலைவர் அமெரிக்கத் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.ஏற்கனவே, ஐ.தே.க. தலைவர் இவ்வார முற்பகுதியில் இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# விலை மதிப்புப் பரிசோதகர் பற்றாக்குறை

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தில் விலை மதிப்புப் பரிசோதகர்கள் பற்றாக்குறை நிலவுவதாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் திருப்திகரமான சேவையை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களின் விலை மதிப்பீட்டுப் பணிகளை யாழ்.அலுவலகமே மேற்கொண்டுவருகிறது. இந்நிலையில் விலை மதிப்புப் பரிசோதகர் பணிக்கு ஆளணிப் பற்றாக்குறை நீண்ட காலமாக தொடர்ந்து நிலவுகிறது.

விலை மதிப்புப் பரிசோதகர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தலைமை அலுவலகத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஆனாலும், இப் பதவிக்கு நியமனம் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-135)(25)

# மேலும் ஐந்து இலங்கை மீனவர்கள் இந்தியக் காவல் படையால் கைது

தூத்துக்குடியருகே இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் மேலும் ஐந்து பேரை கடலோரக் காவல்படையினர் கைது செய்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

தமிழகக் கடலோரக் காவல் படை உதவிக் கமாண்டர் மோத்தா தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் திருச்செந்தூர் கடல் பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது மணப்பாட்டிலிருந்து 20 கடல்மைல் தொலைவில் இந்தியக் கடல் எல்லைக்குள் இலங்கையைச் சேர்ந்த சிலர் படகொன்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

உடனே கடலோரக் காவல் படையினர் அந்தப் படகை சுற்றிவளைத்தனர். நீர்கொழும்பைச் சேர்ந்த ஜோசப், ஜூட் அன்ரனி, இம்மானுவேல் நெல்சன், அன்ரனி, எடிசன் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களாவர்.

தூத்துக்குடி பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே, கடந்த வார இறுதியில் தமிழகக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சிங்கள மீனவர்கள் ஒன்பது பேர் தமிழக கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர். இவர்கள் நாசகார வேலையில் ஈடுபடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்களா என்பது குறித்து விசாரணைகள் இடம் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (க)

# நான்காவது ஆட்டத்திலும் வென்று தொடரைக் கைப்பற்றியது இந்தியா

கொச்சியில் நடைபெற்ற நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்தியா 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.இதன் மூலம் இன்னும் மூன்று ஆட்டங்கள் மீதமிருக்க ஒருநாள் தொடரை 4-0 என்ற ரீதியில் தன்வசமாக்கியது இந்தியா.

இங்கிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட 238 என்ற வெற்றியிலக்கை ராகுல் டிராவிட்(65), இர்பான் பதான்(46) மற்றும் யுவராஜ்சிங்(48) ஆகியோரின் ஓட்டக்குவிப்புடன் இலகுவாக அடைந்தது இந்தியா. இரண்டாவது விக்கெட்டில் பதான்-டிராவிட் ஜோடி 76 ஓட்டங்களைப் பகிர்ந்தும் யுவராஜ்-ரெய்னா ஜோடி ஐந்தாவது விக்கெட்டில் 72 ஓட்டங்களைப் பகிர்ந்தும் வெற்றிக்கு வழிகோலினர்.

முதலில் ஆடிய இங்கிலாந்து 8 பந்துகள் மீதமிருக்க சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இந்தத் தொடரில் இங்கிலாந்து தான் பங்குபற்றிய 4 ஆட்டங்களிலும் சகல விக்கெட்டுகளையும் இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடைசியாகப் பங்குபற்றிய 11 ஒருநாள் ஆட்டங்களில் இங்கிலாந்திற்கு இது ஒன்பதாவது தோல்வியாகும். இதேவேளை இந்தியா தொடர்ச்சியாக தனது எட்டாவது வெற்றியைப் பெற்றுள்ளது.

27 ஓட்டங்களிற்குள் 2 விக்கெட்டுகளை இழந்து தவித்த இங்கிலாந்து அணிக்கு பீற்றர்சன் நம்பிக்கையளித்தார். அவர் மூன்றாவது விக்கெட்டில் கொலிங்வூட்டுடன் இணைந்து 15 ஓவர்களில் 90 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற அதேவேளை நான்காவது விக்கெட்டில் பிளின்ரொப்புடன் 7 ஓவர்களில் 36 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டார். இறுதியில் பீற்றர்சன் 10 பவுண்டரிகளுடன் 2 சிக்ஸர்களுடன் 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஹர்பஜன் சிங்கின் பந்தில் வெளியேறினார். பகுதிநேர சுழற்பந்து வீச்சாளர்களான யுவராஜ்சிங் மற்றும் சேவாக் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்தியஅணி முதல் பத்து ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 54 ஓட்டங்களைக் குவித்து நல்லதொரு ஆரம்பத்தைப் பெற்றது. எனினும் சுழல் பந்து வீச்சாளர் பிளக்வெல் தனது முதல் ஓவரிலேயே சேவாக்கை வெளியேற்றினார். 14 மாதங்களின் பின் ஒருநாள் ஆட்டத்தில் ஆடிய இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் மத்தியூ ஹோகார்ட் தனது முதல் மூன்று ஓவர்களில் 26 ஓட்டங்களை அள்ளி வழங்கினார். இறுதியில் அவர் 9 ஓவர்கள் பந்துவீசி 59 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார்.

வெற்றிக்கு 14 ஓட்டங்கள் தேவையென்ற நிலையில் யுவராஜும் பதானும் 44 ஆவது ஓவரில் ஆட்டமிழந்து வெளியேறினர். இவர்கள் இருவரும் அண்டர்சனின் பந்துவீச்சில் தமது விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர். பின்னர் களம்புகுந்த டோனி மற்றும் பவார் ஆகியோர் இந்திய அணியை வெற்றிக்கரைக்கு அழைத்துச் சென்றனர்.

இவ்வாட்டத்தின் ஆட்டநாயகனாக யுவராஜ்சிங் தெரிவுசெய்யப்பட்டார். (ம)

# குடாநாட்டில் இந்த வருடம் 60 கிராமங்களில் சர்வோதய ஏற்பாட்டில் அபிவிருத்திப் பணி

தென்மராட்சி கிழக்கு,ஏப்.7

சர்வோதயப் அமைப்பு இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் 60 கிராமங்களில் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

மேற்படி வேலைத் திட்டங்கள் சார்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை சர்வோதயத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

சர்வோதயத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ.கே.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் மங்கள விளக்கினை சர்வோதயத்தின் தலைமையக வலுவூட்டல் பகுதித் தலைவர் அபெநாயக்க ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து சர்வோதய கீதம் இசைக்கப்பட்டது. வரவேற்புரையை திருமதி ஜெயமதி நிகழ்த்தினார். தொடர்ந்து சர்வோதயம் மேற்கொள்ளும் வேலைத்திட்டம் சார்பான விளக்கம் மற்றும் சர்வோதய அமைப்பின் கொள்கைத் திட்டம் பற்றியும் வலுவூட்டல் பகுதித் தலைவர் அபேநாயக்கா விரிவாகத் தமிழில் எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து சர்வோதய சங்க அரச பதிவு இணைப்பாளர் குலசிறி விதாண வாசம் மற்றும் சர்வோதய இராமசுயராஜ்யம் சார்பான இணைப்பாளர் உபுல் செனிவிரத்தினா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்தக் கலந்துரையாடலுக்கு குறிப்பிட்ட 60 கிராமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் நூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர். (எ-122)(25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# செயலில் காட்டுவதற்கான இறுதி வேளை நெருங்குகிறது

அடுத்த சுற்று அமைதிப்பேச்சுக்கு இன்னும் பன்னிரண்டு நாட்களே உள்ளன. இந்தக் காலத்தில் களத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள், மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் என்பனவே அடுத்த சுற்று அமைதிப்பேச்சு திட்டமிட்டபடி சாத்தியமாகுமா என்பதைத் தீர்மானிக்கப்போகின்றன.

கடந்த பெப்ரவரியில் ஜெனீவாவில் நடைபெற்ற முதல்சுற்றுப் பேச்சுகளின்போது எட்டப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்து வருகின்றது இலங்கை அரசு. முன்னைய நிலையைவிட இப்போது நிலைமை மோசமடைந்து வருகின்றது எனச் சுட்டிக்காட்டுகின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

*"ஜெனீவாவில் இணக்கப்பாடு கண்டபின்னர், தமிழர் தாயகப் பிரதேசத்தில் முன்பு இருந்ததைவிட ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. இந்தக் குழுக்கள் வெளிப்படையாகவே இராணுவத்துடன் சேர்ந்து இயங்கி, பொதுமக்களை அச்சுறுத்தி, வன்முறைகளைக் கட்டவிழ்த்து, போராளிகள் மீதான தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.*

*"அரசு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு கால அவகாசம் சொற்பமே உள்ளது. அதற்குள் அரசு தனது நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும்."*

- இப்படி தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார். சொற்பகால அவகாசம் என்றாலும் நல்லெண்ணத்தைச் செயலில் காட்டுவதற்கான சந்தர்ப்ப சூழ்நிலையும், வாய்ப்பும் இலங்கை அரசுக்கு கிடைத்திருப்பதையும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார் தமிழ்ச்செல்வன்.

*"தெற்கில் மிக வெளிப்படையாகவும், கடுமையாகவும் இனவாதம் பேசிய கட்சிகள் மக்களாலேயே தூக்கி எறியப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனிமேலும் சாக்குப்போக்குக் காரணம் கூறுவதற்கு ஒன்றுமேயில்லை. அவர் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை எடுத்து, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு முழு அர்ப்பணிப்போடு செயற்படவேண்டும். அதற்கான பொறுப்பும் கடமையும் அவருக்கு உண்டு. அதற்கான ஆணையைத்தான் சிங்கள மக்கள் அவருக்கு வழங்கியிருக்கின்றார்கள் என்று நான் நினைக்கிறேன். இனிமேலும் இரட்டை வேடம் போடாமல், தீர்க்கமான முடிவுகளை எடுத்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்ல அவர் முன்வர வேண்டும்."* - இவ்வாறுதெளிவாகக் கூறியிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

நாம் இப்பத்தியில் ஏற்கனவேசுட்டிக்காட்டியமை போன்று உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள், அமைதி முயற்சிகள் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்தர் எடுப்பதற்கு வசதியான - தோதான - உகந்த - சூழ்நிலையையும், வாய்ப்பையும், சந்தர்ப்பத்தையும் அவருக்கு வழங்கியிருக்கின்றன.அந்த நடவடிக்கைகளைஆவர் எடுப்பாரா என்பதே இன்றைய கேள்வியாகும்.

அத்தகைய நடவடிக்கைகளை அரசுத் தரப்பு எடுக்காவிட்டால் - கடந்த ஜெனீவாப் பேச்சுகளில் எட்டப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் தனது உளப்பூர்வமான ஈடுபாட்டை அரசுத்தரப்பு வெளிப்படையாகத் தெரியப்படுத்தாவிட்டால் - அடுத்த சுற்றுப் பேச்சில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவது சாத்தியமல்ல என்ற கருத்து நேற்றுமுன்தினம் தமிழ்ச்செல்வன் அளித்த பேட்டியின் இடையே இழையோடுவதும் நாம் கவனிக்கத்தக்கது.

அதுமட்டுமல்ல. முதற்சுற்று ஜெனீவாப் பேச்சின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஒட்டுப்படைகளைக் கட்டுப்படுத்த அரசுத் தரப்புத் தவறுமானால்,அவற்றின் செயற்பாட்டை கட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை புலிகள் இயக்கம் தயங்காமல் எடுக்கும் என்பதையும் தமிழ்ச்செல்வன் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார்.

இந்தக் கருத்துக்களைப் பொருத்திப் பார்த்தால், அமைதி முயற்சிகள் இப்போது சிக்குண்டிருக்கும் - இக்கட்டான - விபரீதமான - நிலைமையின் ஆழம் புரியும்.

ஒட்டுப்படைகளை இலங்கை அரசுதான் கட்டுப்படுத்தவேண்டும். அவ்வேலையை புலிகள் செய்யமுடியாமல் யுத்த நிறுத்த உடன்பாடு - புலிகளைக் கட்டுப்படுத்தியிருக்கின்றது. இதில் அரசு தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறுமானால் தம்மைக் கட்டுப்படுத்தும் யுத்தநிறுத்த உடன்பாட்டை புறம் ஒதுக்கி, ஒட்டுப்படைகளைக் கட்டுப்படுத்தும் வேல்லையைப் புலிகள் தாமே செய்யவேண்டியிருக்கும்.

அப்படி நேர்ந்தால் அமைதி முயற்சிகள் அடியோடு குழம்புவது மட்டுமல்ல, அதன்பின் கொடூரப்போர் வெடிப்பதும் தவிர்க்க முடியாததாகும்.

ஜெனீவாவில் அளித்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்தி, அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் அரசு நகர்த்துமா? அல்லது பொறுப்பற்று நடந்து போருக்கு வழி செய்யுமா?

முடிவு கிட்டுவதற்கு நாட்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் விழா சிறப்புற ஆரம்பம்

நல்லூர்,ஏப்.7

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ்மன்றத்தின் முத்தமிழ் விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமானது.

கல்லூரியின் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் மன்றத்தின் பிரதித் தலைவர் க.யூட்சிபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைத்தார் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி.

அதிபரின் ஆசிரியுரையைத் தொடர்ந்து பிரதம விருந்தினரான கமநலத் திணைக்களத்தின் முன்னாள் உதவி ஆணையாளர் நாகலிங்கம் குழந்தைவேலு உரை நிகழ்த்தினார்.

முன்னதாக முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் உருவச்சிலையைத் திறந்துவைத்த பிரதம விருந்தினர் அடிகளாரின் சிலைக்கு மலர்மாலை அணிவித்தார். அவரைத் தொடர்ந்து கல்லூரி அதிபர், சிலையை வடிவமைத்த ஆசிரியர் மகேசு பார்த்திபன், முத்தமிழ்மன்றக் காப்பாளர் செல்வி விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் ஆகியோர் மலர்மாலைகளை அணிவித்தனர்.

சிலையை வடிவமைத்த மகேசு பார்த்திபனுக்கு பிரதம விருந்தினர் பொன்னாடை போர்த்துக்கௌரவித்தார். அதிபர் மலர்மாலை அணிவித்தார். மன்றக் காப்பாளர் செல்வி விக்னேஸ்வரி பரிசில் வழங்கினார். நாடகப் போட்டிகளும் இடம்பெற்றன. இரண்டாவது நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. (த-111)(24)



# வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவானோருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவை வழங்க ஏற்பாடு

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் 2ஆம் கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட 4 ஆயிரம் பயனாளிகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவு இந்த மாதம் வழங்கப்படவுள்ளது என்று வீடமைப்புத் திட்டத்தின் யாழ். மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் வே. சாம்பசிவம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக ,அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் உலக வங்கியின் 750 கோடி ரூபாய் நிதியுதவியுடனும் இலங்கை அரசின் 20 .கோடி ரூபாய் நிதியுதவியுடனும் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின்கீழ் 10 ஆயிரத்து 546 வீடுகள் புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் கடந்த 2004ஆம் ஆண்டு 'ஆரம்பிக்கப்பட்டன. அதுதொடர்பான வேலைத் திட்டங்களே தற்போதும் இடம்பெற்று வரு கின்றன.

இதில் இந்த ஆண்டுக்கான பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களுக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவு இந்த மாதமளவில் வழங்கப்பட உள்ளது - என்றார். (எ-13)(24)

# ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு ஒருபோதும் இடமளியோம்

## மாணவர் அமையம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.7

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. எமது உரிமைகளை நிலைநாட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவோம்.

- இவ்வாறு யாழ். மாவட்ட உயர் நிறுவனங்களின் மாணவர் அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:-

இராணுவத்தினர் தொடர்ந்து தமிழ் மக்களையும் தமிழ் மாணவர்களையும் கொலைசெய்தும் கைதுசெய்தும் சித்திரவதை செய்தும் வருகின்றனர். அது மட்டுமன்றி தமிழ்மக்களின் பூர்வீக நிலங்களையும் கடற்பிரதேசத்தையும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்தும் வைத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் தொடர்ந்து தமது தேவைகளுக்காக எமது சொத்துகளைப் பயன்படுத்த முனைவது மாத்திரமன்றி சில அற்ப சலுகைகளுக்காக எம்மைத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தவும் முனைகின்றனர்.

எனவே, இவ்விடயம் தொடர்பாக நாம் அனைவரும் விழிப்பாகச் செயற்படவேண்டிய தேவையுள்ளது.

குறிப்பாக வருகின்ற புதுவருடத் தினத்தன்று இராணுவத்தினர் தமது களியாட்ட நிகழ்வுகளுக்காக எமது எந்தவொரு சொத்தையும் அதாவது பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், பொது இடங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம் - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-203) (24)

## நாளை

பங்குனி 25
சனிக்கிழமை
08.04.2006
திதி : தசமி
பிற்பகல் 01.18
நட்சத்திரம் : ஆயிலியம்
பின்னிரவு : 12.20
சுபநேரம் : 03.07 - 04.37
ராகுகாலம் : 09.07 - 10.37
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பிறரோடு ஒத்துவாழாதவர் தன்னலத்தை நாடுகின்றார். பிறர் கூறும் தக்க அறிவுரையும் அவருக்கு எரிச்சலை உண்டாக்கும். - சாலமோனின் நீதிமொழி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்குண்டு

தொலைபேசி பூத் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: 541, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். **T.P.: 021 4590337.** (49056)

## நாய்க்குட்டி விற்பனை

இரண்டு மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் பிஞ்சர் குறோஸ் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.6, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஸ்ண மிஷன் பாடசாலை பின் ஒழுங்கை), கொக்குவில் கிழக்கு. மாலை 5மணி முதல் 6.30 மணிவரை பார்வையிடலாம். (48836)

## தேவை

நோயாளி வயோதிபப் பெண் ஒருவரை வீட்டிலிருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் உடன் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு 541, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். **T.P.: 021 4590337, 077 6331061.** (49055)

## வீடு வாடகைக்குத்தேவை

ஒரு சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. சுன்னாகத்திற்கும் தாவடிச் சந்திக்கும் இடையில் விரும்பத்தக்கது. தொடர்பு: 077 6121914. (49041)

**A**-9 வீதியில் நுணாவில் **POLICE STATION** இற்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. திங்கள், புதன் 9.**a.m. to** 4.**p.m** சந்திக்கவும். தொடர்பு: **K.**ராஜமந்திரி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (49065)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் வயது 28,•5'6'' உயரமுடைய பூரட்டாதி நடசத்திரம் 6 இல் செவ்வாயும் இலக்கின பாவம் 8, முழுமையாக 49 கிரகபாவமுடைய அழகிய **(B.Com Graduate)** அரச நிறுவனத்தில் **Finance Assistant** ஆக பணிபுரியும் பெண்ணிற்கு **DOCTOR, ENGINEER, ACCOUNTANT** தரத்திலான உள்நாட்டு, வெளிநாட்டு மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: 021 222 3276, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (48961)

## தவறிவிட்டது

திருநாவுக்கரசு குமாரதாசன் என்பவருடைய தே.அ.அட்டை (801654320v), விஷேட அடையாள அட்டை (0902007413) என்பன யாழ்ப்பாணத்திற்கும் கொக்குவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். **T.P.No: 0776687300** (49223)

## அபூர்வ ஜோதிடம்

கொடிய வேதனையான பாரிசவாதம், சலரோகப்புண் அற்புத முறையில் குணமாதல், அதிஷ்டப்பலன் அறிதல். தினமும் 8.30 - 2.**p.m.** தொடர்பு: உயரப்புலம் பிள்ளையார் கோயிலடி, விதானையார் வளவு, ஆனைக்கோட்டை. (49036)

# முதியோர் இல்லத்துக்கு உடுபுடைவைகள் அன்பளிப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களுக்கு உடுபுடைவைகளையும் நாவற்குழி வீடமைப்புத் திட்ட சனசமூக நிலையத்திற்கு தளபாடங்ளையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கழகத் தலைவர் சி. சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வுகளுக்கு லயன்ஸ் கழக வலயத் தலைவர் லயன் த.அன்பானந்தன், சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் லயன் ஸ்ரீபன் லெனாட் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுகளில் லயன்ஸ் கழக மாவட்ட சுகாதரப்பிரிவு தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம், 'பார்வைக்கு முதலிடம்' பிரிவுத் தலைவர் லயன் கா. சற்குணதேவன், சுனாமி மற்றும் புனரமைப்புத் தலைவர் லயன் செ.கா. நவரத்தினம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-117)(39)

## மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகள் கவனத்திற்கு

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடல்வளம் கற்று வெளியேறி வேலைவாய்ப்பின்றி இருக்கும் டிப்ளோமாதாரிகளுடனான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கடல்வள அபிவிருத்தி நிலையத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளது என்று மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (எ-203) (39)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
10 . 12 . 1964

மறைவு
09 . 03 . 2006



## செல்வி வல்லிபுரம் ஜெயந்தி

*(யா/குடத்தனை அ.த.க.வித்தியாலய ஆசிரியை)*

09.03.2006 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (08.04.2006) சனிக்கிழமை காலை 7 மணிக்கு தும்பளை முத்துமாரி அம்மன் ஆலயத்தைச் சார்ந்த அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் எமது இல்லத்தில் மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். அன்றைய அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**விநாயகர் தோட்டம்,**
**தும்பளை, பருத்தித்துறை.** (சி.48730)(39-14-11)

**குடும்பத்தினர்.**

---

ஜெய்குருதேவ்

**நிலை இல்லா உலகு**
**நியமில்லா உறவு**
**நிலையான என் குருவே**
**வருக! வருக!**

**வராகினி கேதீஸ்வரன்**
*குடும்பம்.*



(49064)(39-11-14)

---

**COLLEGE of BUSINESS MANAGEMENT**
(C.B.M)
(33, Temple Road, Kokuvil East Kokuvil)
**வங்கியியல் துறைகளுக்கான கற்கைகள்**

**ஆரம்பம்: 08.04.2006** *(சனி)* **4.p.m.**

**CBF** | **ACBF**

**இயக்குநர்:** **N.உமாகாந்த்** (HP-**0777-110756**)

**(சகல பாடங்களும் நடைபெறுகின்றன)**

(49057) (39-11-14)

---

அதிர்ஷ்டப்புப இல. **1699**

05.04.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**02 03 41 61 (01)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. **201076973** இலிருந்து **201093501**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 34,18,650/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 34,18,650/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எணகளுடன் சுப்பர் இல. | 26 | 5,000/- | 1,30,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 440 | 1,000/- | 4,40,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,434 | 500/- | 7,17,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,252 | 40/- | 8,50,080/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,394 | 20/- | 4,07,880/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,02,211 | 10/- | 30,22,110/- |
| **மொத்தம்** | | | **75,67,070/-** |
| தங்க நகைகள் , தையல் இயந்திரம் , பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,45,764 | | **81,67,070/-** |

தொடர் இல. **301016727** க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 8 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

**இந்த சனிக்கிழமை**
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 42,26,650/-**

| | |
|---|---|
| குருநாகல் | 201078939-0-92 |
| கொழும்பு | 201089782-1-00 |
| புத்தளம் | 201091513-3-03 |
| மொனராகலை | 201080648-5-73 |
| தம்புள்ளா | 201089987-9-81 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செயின்ட் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03

---

# வெளிவந்துவிட்டது.!!!

## ஏப்ரல் மாத இதழ்

தமிழ் சஞ்சிகை உலகில் **புதிய பிரவேசம்**



இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

**தமிழ் PCTIMES**
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

2006 மார்ச் முதல் மாதாந்தம் வெளிவருகிறது.

**இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும் !**

புதிய

- தகவல்கள்
- செய்திகள்
- மென்பொருள் (SoftWare)
- வன்பொருள் (HardWare)
- செய்முறைகள்
- செயற்பாடுகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

wijeyanewspapers

**விஜய** பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்தில் அரசியல் நெருக்கடி: பிரதமர் தக்சின் பதவி விலகினார்

பாங்கொக்,ஏப்.7

தாய்லாந்து பிரதமர் தக்சின் சின்வத்ரா பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்திருப்பதைத் தொடர்ந்து அந்நாட்டின் அரசியல் எதிர்காலம் ஸ்திரமடையலாம் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

என்றாலும் அவரது ராஜினாமாவால் எழுந்துள்ள பல கேள்விகள் விடை காணப்படாமலேயே இருக்கின்றன.

தக்சின் தமது தலைமையை தற்காலிகமாக அவரது உதவி பிரதம மந்திரி சிட்சாயிவன சத்தித்யாவிடம் ஒப்படைத்துள்ளார். ஆனால், அவருக்குப் பின் யார் பிரதமராவார் என்பதை அவரது கட்சிதான் முடிவு செய்ய வேண்டும்.

புதிய அரசு எப்பொழுது பதவிக்கு வரும் எவ்வாறு பதவிக்கு வரும் என்பதில் குழப்பம் நிலவுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அவசர தேர்தலில் தக்சின் கட்சி வெற்றிபெற்றது. எதிர்க்கட்சிகள் அவர் மீது ஊழல், அதிகார துஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி ஆர்ப்பாட்டம் நடத்தியதால் அவர் அவசர பொதுத் தேர்தலை நடத்தினார்.

குற்றச்சாட்டுக்களை மறுத்தார். என்றாலும் முக்கிய மூன்று எதிர்க்கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்தன. தக்சினுக்கு எதிராக மிக அதிக வாக்குகள் பதிவானதையடுத்து அவர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

தாய்லாந்து மன்னரைச் சந்தித்துப் பேசியதன் பின்னர் தக்சின் ஒரு புதிய பிரதமர் தெரிவாகும் வரை தாம் காபந்து பிரதமராக இருக்கப்போவதாக அறிவித்தார்.

### பிரதமருக்கு ஏற்பட்ட பிரச்சினை

தக்சின் சின்வத்ரா ஒரு வெற்றிகரமான தொழில் அதிபராவார். அவரது குடும்பத்தினர் ஷின் கோப்பரேஷன் நிறுவனத்திலிருந்து பங்குகளை சிங்கப்பூர் தொழில் முனைவோருக்கு விற்க முடிவு செய்ததையடுத்து அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எழத் தொடங்கின. அவரது குடும்பம் வரி ஏய்ப்பு செய்ததாகவும் அதிகார துஷ்பிரயோகம் செய்ததாகவும் அழுத்தங்கள் வெளிப்படலாயின.

தாய்லாந்தின் ஜனநாயக அமைப்பினை உறுதிப்படுத்துவதற்கு அரசியல் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் அதுவரை இடைக்கால அரசு ஒன்று பதவியில் அமர வேண்டும் என்று எதிர்த்தரப்பு ஜனநாயக வாதியான அபிசித் வெஜ்ஜஜிவா என்பவர் தெரிவித்துள்ளார்.

(ப)(22)

## இந்தியப் பிரதமரின் ஹெலிகொப்டரில் பழுது

சண்டிகர்,ஏப்.7

இந்தியப் பிரதமரின் பயன்பாட்டுக்கான ஹெலிகொப்டரில் பழுது ஏற்பட்டது. உரிய நேரத்தில் அது கண்டுபிடிக்கப்பட்டதால் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது.

பிரதமரும் அவருடன் ஹரியானா மாநிலம் பானிப்பட்டுக்குச் சென்றவர்களும் பயன்படுத்துவதற்காகத் தயார் நிலையில் வைத்திருந்த 3 ஹெலிகொப்டர்களில் ஒன்றில் திடீரென பழுது ஏற்பட்டது. பின்னர் அதைப் பழுதுபார்க்க, டில்லியிலிருந்து நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். ஆனால் பிரதமரின் பயண திட்டத்தில் மாறுதல் இல்லாமல் அவர் டில்லிக்குத் திரும்பினார்.

பானிப்பட்டிலிருந்து புறப்படுவதற்காக அந்த ஹெலிகொப்டரை விமானி இயக்கிப் பார்த்தார். அப்போது இயந்திரத்தில் தீப்பொறிகள் பறந்தன. உடனே என்ஜினை அணைத்துவிட்டு, ரேடியோ மூலம் விமான நிலையக் கட்டுப்பாட்டுக் கோபுரத்துக்கு அவர் தகவல் அளித்தார். பிறகு மற்ற ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன. (ஐ) (27)

## உலக அரங்கில்

## புதுடில்லியில் உண்ணாவிரதம் இருந்த சமூகசேவகி கைது!

புதுடில்லி,ஏப்.7

புதுடில்லியில் உண்ணாவிரதம் இருந்து வந்த சமூக சேவகி மேதா பட்கர் கைது செய்யப்பட்டு டில்லி மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டார். மத்திய பிரதேசத்தில் நர்மதா நதி அணை நீர்மட்டத்தை 110.64 மீற்றரில் இருந்து 122 மீற்றராக உயர்த்த நர்மதா கட்டுப்பாட்டு ஆணையம் முடிவுசெய்துள்ளது. ஏற்கனவே அணைத்திட்டத்தால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு கிடைக்கவில்லை. இந்நிலையில் அணை மட்டத்தை உயர்த்தும் திட்டம் அமுல்படுத்தப்பட்டால், மேலும் 35 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்து வீடுகளை விட்டு வெளியேற நேரிடும் என்று கூறி பாதிக்கப்பட்ட கிராம மக்கள், சமூக சேவகி மேதா பட்கரின் உதவியுடன் போராட்டத்தில் இறங்கினர். அரசு தரப்பில் சரியான பதில் இல்லாததால், டில்லியில் மார்ச் 29ஆம் திகதி முதல் டில்லி ஜந்தர் மந்திரில் மேதா பட்கர் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினார். இந்நிலையில் அவர் கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருடன் உண்ணாவிரதம் இருந்த மேலும் மூவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கைதை எதிர்த்து போராட்டம் நடத்திய 300 பேரை பொலீஸார் கைதுசெய்தனர்.

(ஐ) (27)

## தென்னாபிரிக்காவில் இந்தியர்கள் கைது!

டேர்பன், ஏப். 7

சட்டவிரோதமாக தென்னாபிரிக்காவில் குடியேறிய 10பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இந்தியர், பாகிஸ்தானியர் அடக்கம்.

வேறு வேறு கண்டங்களில் இருந்து முறையான பயண ஆவணங்கள் இல்லாமல் வேலைக்கு ஆள்களைக் கூட்டி வரும் தொழிலில் ஈடுபட்டுள்ள கணவன், மனைவியையும் அவர்களுடன் சேர்த்து பொலீஸார் கைதுசெய்தனர். (ஐ)(27)

## தமிழக நதிகளை இணைப்பேன் நடிகர் விஜயகாந்த் பிரசாரம்

பூந்தமல்லி,ஏப்.7

எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தில் உள்ள நதிகளை இணைத்து குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று நடிகர் விஜகாந்த் தெரிவித்திருக்கிறார்.

சென்னை போரூர் , பூந்தமல்லி, திருமழிசை பகுதிகளில் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத் தலைவர் நடிகர் விஜயகாந்த் கடந்த புதன்கிழமை தேர்தல் பிரசாரம் செய்தார். அப்போது அவர் தனது உரையில் கூறியதாவது:-

தி.மு.கவும் அ.தி.மு.கவும் தமிழகத்தை 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டுவருகின்றன. இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றை ஒன்று குறை கூறுகின்றன. இரு கட்சிகளின் தேர்தல் அறிக்கையும் மக்களை ஏமாற்றுவதாக உள்ளது.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தில் உள்ள நதிகளை இணைப்போம். வீட்டுக்கு வீடு குளியலறை, கழிப்பறை கட்டித்தருவோம். இன்று எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட உள்ளோம். அதில் புதுமையான புரட்சிகரமான திட்டங்கள் இருக்கும்.

தனியார் பள்ளிகளில் உள்ளதைப் போல் அரசுப் பள்ளிகளிலும் கல்வித் தரத்தை மேம்படுத்துவோம் - என்றார் அவர்.

(ஐ-202)



சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்தித்து தி.மு.கவில் அடிப்படை உறுப்பினராக தன்னை இணைத்துக்கொண்டார் திரைப்பட இயக்குநரும் நடிகருமான பாக்கியராஜ். அவருடன் நடிகர் சந்திரசேகர், தி.மு.க. துணைப் பொதுச் செயலர் மு.க.ஸ்டாலின், நடிகர் தியாகு, இயக்குநர் அமிர்தம்.

## தி.மு.கவில் சேர்ந்தார் பாக்கியராஜ்

சென்னை,ஏப்.7

திரைப்பட நடிகர் மற்றும் இயக்குநர் பாக்கியராஜ் தி.மு.க. தலைவர் கருணாநிதி முன்னிலையில் அக்கட்சியில் சேர்ந்தார்.

பாக்கியராஜைத் தன்னுடைய கலையுலக வாரிசாக எம்.ஜி.ஆர். 1984இல் அறிவித்தார். 1985 இல் நடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார் பாக்கியராஜ்.

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு எம்.ஜி.ஆர். மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கி தேர்தலைச் சந்தித்தார் பாக்கியராஜ். பின்னர் அக்கட்சியைக் கலைத்துவிட்டார். இப்போது தி.மு.கவில் சேர்ந்துள்ளார்.

(ஐ) (22)

## அ.தி.மு.கவில் நடிகை கோவை சரளா

சென்னை,ஏப்.7

தென்னிந்திய நடிகை கோவை சரளா அ.தி.மு.கவில் சேர்ந்துள்ளார். முதல்வரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவை தஞ்சாவூரில் புதன்கிழமை அவர் சந்தித்துப் பேசினார். அப்போது அ.தி.மு.கவில் அவர் அடிப் படை உறுப்பினராக சேர்ந்தார். அப்போது கோவை சரளாவுடன் நடன மாஸ்டர் ரகுராம் உடனிருந்தார் என கட்சியின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

நடிகர்கள் விஜயகுமார், முரளி, செந்தில் ஆகியோர் ஏற்கனவே அ.தி.மு.கவில் இணைந்துள்ளனர். சமீபத்தில் நடிகை சிம்ரன், முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து அ.தி.மு.கவுக்கு ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)(22)

### கள்ளத்தனமாகப் படகில் இலங்கை மீள முயன்ற

## 20 ஈழ அகதிகளை ஹெலி மூலம் துரத்திப்பிடித்தது இந்தியப்படை

இராமேஸ்வரம்,ஏப்.7

தமிழகத்திலிருந்து படகு ஒன்றின் மூலம் இலங்கை திரும்புவதற்கு முயன்ற இலங்கைத் தமிழ் அகதிகள் இருபது பேரை இந்தியக் கடற்படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் துரத்திப்பிடித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-


இந்தியக் கடற்படையினர் கடந்த செவ்வாயன்று அதிகாலை தனுஷ்கோடி கடல் பிரதேசத்தில் ஹெலிக்கொப்டரில் ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தனுஷ்கோடி தென்கடல் பகுதியில் படகொன்று வேகமாக சென்றுகொண்டிருப்பதை அவர்கள் கண்டனர். கடற்படையினர் ஹெலியில் துரத்திச் சென்றனர். இதனால் படகோட்டிகள் படகை தனுஷ்கோடி கடற்கரையில் நிறுத்திவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

இதனையடுத்து, ஹெலிக்கொப்டரில் சென்ற கடற்படையினர் இராமேஸ்வரம் கடற்படை முகாமிற்கு தகவல் தெரிவித்தனர். பின்னர் கடற்படையினர் படகைக் கைப்பற்றி படகில் வந்த நான்கு குழந்தைகள், எட்டுப் பெண்கள் உட்பட 20 அகதிகளையும் கைது செய்து தனுஷ்கோடி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

தமிழகத்திலுள்ள பல்வேறு முகாம்களிலிருந்து தாங்கள் வந்தனர் என்றும், இலங்கை செல்வதற்காக உச்சிப்புளி அருகிலுள்ள தலைத்தோப்பு கடற்கரைக்கு வந்து, அங்கிருந்து கடத்தல் படகு மூலம் கள்ளத்தனமாக இலங்கை செல்ல முயன்றனர் என்றும் மேற்படி அகதிகள் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.




## காசி குண்டுவெடிப்புச் சம்பவம் சூத்திரதாரிகள் அறுவர் கைது!



உத்தரப்பிரதேச மாநிலத்தின் காசி நகரில் கடந்த மார்ச் மாதம் நடந்த இரட்டைக் குண்டு வெடிப்பில் 20 பேர் இறந்தனர். இது தொடர்பாக புதன்கிழமை கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளை (முகமூடி அணிந்தவர்கள்) படத்தில் காணலாம்.

லக்னோ,ஏப்.7

உத்தரப் பிரதேசத்தில் கடந்த மாதம் 7ஆம் திகதி 20 பேரை பலிவாங்கிய காசி இரட்டைக் குண்டுவெடிப்பு வழக்கில் முக்கிய திருப்பமாக 6 தீவிரவாதிகள் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

எனினும் இந்த சம்பவத்தில் தொர்புடைய வங்கதேசத்தவர் 3 பேர் இன்னும் பிடிபடவில்லை.

இதுதொடர்பாக அதிரடிப் படை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஜக்மோகன் யாதவ் கூறியதாவது:-

கைதானவர்களில், வலியுல்லா என்பவர் குண்டுவெடிப்புச் சம்பவத்தை நிறைவேற்ற மூளையாக செயற்பட்ட சதிகாரர். இவர் அலாகாபாத் மாவட்டத்தில் உள்ள புல்பூர் பகுதியைச் சேர்ந்தவர்.

இவர் கொடுத்த தகவலின் பேரில் லக்னோ சரோஜினி நகரில் மற்ற 5 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மெகபுக் அலி (மேற்கு வங்கம் வடக்கு 24 பர்கானா மாவட்டம்) சையது சோயப் ஹசன், பர்கான் (லக்னோவைச் சேர்ந்தவர்கள்), முகமது ஹிஸ்வன் சிதிக், முகம்மது சாத் அலி (இருவரும் ஜோதிபா புலே நகர் மாவட்டம்) ஆகியோர் கைதான மற்ற 5 பேரும் ஆவார்.

மெகபுத் அலி, ஹசன் சிதிக் மற்றும் முகம்மது சாத் ஆகியோர் பாகிஸ்தானில் 28 நாள்கள் பயங்கரவாதப் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களை பாகிஸ்தானுக்கு அனுப்பியதும் வலியுல்லாதான். இவர் வங்கதேசத்தை மையமாக கொண்டு செயற்படும் ஹர்கத் உல் ஜிகாதி அல் இஸ்லாமி அமைப்பின் தளபதியாக தற்போது உள்ளார் - என்று தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெய்குருதேவ்

**மதங்களைக் கடந்த மகானே!!**

**உங்களை வருக வருக என வரவேற்கின்றோம்.**

சச்சியா இரும்பகம்,
தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.

**ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்** (49026)(32.26.11.15)




முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

License No : 50445

BS No : 5412:1996
License No : KM41240

ஏக முகவர்கள்
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5. 2337283-5
பெக்ஸ்: 2446554

WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

Access Graphics


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 - 09 - 1959

மறைவு 20 - 03 - 2005

### அமரர் சதாசிவம் சதானந்தன்

(தேசிய தொழிற் பயிற்சிப் பரிசோதகர்)

திதி: 07-04-2006

*அன்புடனே எமை வளர்த்த பாசமிகு அப்பாவே!*
*பள்ளி சென்று துள்ளிவர பார்த்து மகிழ்ந்தீரே*
*பாவி நாம் என்ன பாவம் செய்தோமோ!*
*எமை இங்கு தவிக்கவிட்டுப் பிரிவதற்கு*
*ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறாது எம் துயரம்.*

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம். (48951)(26.11.15)

தகவல்:
**மனைவி,பிள்ளைகள்.**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 - 04 - 1950

மறைவு 30 - 03 - 2004

**அமரர்**

### சின்னக்குட்டி செல்லத்துரை

திதி: 07.04.2006

**ஆயிரம் காலங்கள் உங்கள் நினைவு**
**ஆள் மனதில் ஆட்சிபுரியும்**
**ஆண்டு இரண்டு இல்லை**
**ஆண்டாண்டு காலமோடினாலும்**
**நீங்காத நினைவுகளில் நீட்சியாய்...**

கைதடி மேற்கு,
கைதடி. (48992)(26.11.15)

-**மனைவி.**

## உரிமை கோரப்படாத சடலம் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப். 7

கிளிநொச்சி, திருநகர் இலக்கம் 39/1 என்ற முகவரியைச் சேர்ந்த பி.தியாகராசா என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

இவரது சடலம் எவராலும் உரிமை கோரப்படாது வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் சடலத்தைப் பொறுப்பேற்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பொறுப்பாளர் கோரியுள்ளார். (ஓ)(26)

## மனை முகாமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.7

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் இலவச மனை முகாமைத்துவப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள இப் பயிற்சியில் இணைய விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-202)(26)

## தேசிய சேமிப்பு வங்கி கிளைகள் கணனிமயம்

தென்மராட்சி, ஏப். 7

சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இயங்கும் தேசிய சேமிப்பு வங்கிகளின் செயற்பாடுகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் கணனிமயப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-117)(26)

## ஆங்கிலப்பயிற்சி பரீட்சை

அரசகரும மொழித் திணைக்களத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவப் பயிற்சித் திணைக்களத்தால் அரச உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்ட ஆங்கிலப் பயிற்சிநெறியின் பரீட்சை நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பெற்றுக்கொள்ளுமாறு பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார்.

(ஐ-202) (27)

## வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப். 7

'ட்றீம் சொலூசன்ஸ்' நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் இக் கண்காட்சி நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

(த-202)(26)

## மருந்தாளர் பதவிக்கான QUALIFIED PHARMACIST விண்ணப்பம் கோரல்

**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு மருந்தகத்திற்கு தகுதி வாய்ந்த மருந்தாளர்களிடமிருந்து (QUALIFIED PHARMACIST) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இளைப்பாறிய மருந்தாளர்களும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**விண்ணப்பங்கள் 2006-04-15 ஆம் திகதிக்கு முன்பதாக சங்க விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

***பொது முகாமையாளர்,***
***யாழ்ப்பாணம் பலநோ.கூ.சங்கம் - வ.து,***
***127, காங்கேசன்துறைச் சாலை,***
***யாழ்ப்பாணம்.***

(சி/48716)(26.11.15)

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

07.04.2006






**கில்றோய் சர்மிளா** *தம்பதியரின்*
*செல்வப்புதல்வி* **EFFIEA**
*இன்று (07.04.2006) வெள்ளிக்கிழமை*
*தனது மூன்றாவது*
*பிறந்தநாளை கனடாவில் உள்ள தனது*
*இல்லத்தில் வெகுவிமரிசையாகக்*
*கொண்டாடுகிறார்.*
*இவரை அப்பா, அம்மா, தாத்தா,*
*அம்மம்மா, பாட்டி, அப்பப்பா,*
*அப்பம்மா, லொயிட் மாமா,*
*நிம்மி மாமி, ரியூனி சித்தி, பிரபா*
*சித்தப்பா, நியூமன் அங்கிள்*
*மற்றும் உற்றார்,*
*உறவினர் அனைவரும் புனித லூர்து*
*அன்னையின் அருள்பெற்று சீரும்*
*சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறார்கள்.*

*செண்.மேரிஸ் லேன்,*
*பருத்தித்துறை.*

தாத்தா
(A.T.A.தேவராஜா).

**EFFIEA**

(48845)(39.11.15.28)

## பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன் வரலாறடங்கிய (சுய விவரம்) வேண்டுகைகளை 12.04.2006 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**பணிநிலை**

01. ஆய அலுவலர் (ஆண்கள்)
02. ஆய உதவியாளர் (ஆண்கள்)
03. சமையலாளர் (ஆண்கள்)
04. சமையல் உதவியாளர் (ஆண்கள்)
05. கடின உழைப்புச் சிற்றூழியர் (ஆண்கள்)

**தகைமை**

பணிநிலை: 01. க. பொ. த. (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
02. க. பொ. த. (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
03. உள்நாட்டு உணவு வகைகள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
04. சமையல் உதவியாளர் பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
05. ஆண்டு-07 கற்றிருப்பதுடன் சிற்றூழியர் பணியில் மூன்றாண்டு (03) பட்டறிவு இருத்தல் வேண்டும்.

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி**

மேலாளர்,
ஆளணிப் பிரிவு,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்**

12.04.2006 புதன்கிழமை
காலை 10 மணி

**நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்**

நடுவப்பணியகம்
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

குறிப்பு: * தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
* நேர்முகத் தேர்வுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படமாட்டாது. பணிநிலை வேண்டுகைகளை அனுப்பிவைக்காதோரும் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கலாம்.

**மேலாளர், ஆளணிப்பிரிவு,**
**ஆயப்பகுதி.**

(சி-48705)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

பரந்தன்,ஏப்.7

கிராமப் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து தியாக தீபம் அன்னை பூபதியின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளைக் கிளிநொச்சியில் எழுச்சியுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

இதுதொடர்பான கலந்துரையாடல் கடந்த 30ஆம் திகதி கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறைச் செயலகத்தில் கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.போர்ப்பிரியன் தலைமையில் இடம்பெற்றது. கூட்டத் தீர்மானத்திற்கமைவாக திருநகர் வடக்கு, திருநகர் தெற்கு, கணேசபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 15ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு திருநகர் முன்பள்ளியில் நினைவு நிகழ்வுக்ளை நடத்தவுள்ளனர். அன்று உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

உதயநகர் மேற்கு, உதயநகர் கிழக்கு கிராம மக்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 16ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு நினைவு தின நிகழ்வை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அன்றையதினம் இரத்தினபுரம் முன்பள்ளியில் இரத்தினபுரம், திருவையாறு இரண்டாம் பகுதி மக்கள் ஆகியோர் இணைந்து நினைவுதின நிகழ்வுகளை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 17,18,19ஆம் திகதிகளில் முற்பகல் 9 மணிக்கு கிளிநொச்சி அரச அதிபர் செயலக வளாகத்தினுள் நினைவுதினப் பொது நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, நாட்டுப்பற்றாளர் கௌரவிப்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-352-202) (24)

## ஊர்திகளுக்கான பதிவுப்புத்தகம் வழங்கல்

வட்டக்கச்சி,ஏப்.7

தமிழீழ போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரின் நடமாடும் சேவையினூடாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட ஊர்திகளுக்கான தமிழீழ பதிவுப் புத்தகமும் வரி அட்டையும் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இன்று விடத்தல் தீவு பிரதேச செயலகத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரையும் இலுப்பைக்கடவை பிரதேச செயலகத்தில் பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரையும் வழங்கப்படவுள்ளது. முழங்காவில் பிரதேச செயலகத்திலும் முற்பகல் 9 மணிதொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரையும் வழங்கப்படவுள்ளது.

நாளை பூநகரி, ஸ்கந்தபுரம் ஆகிய பிரதேச செயலகங்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரையும் வழங்கப்படவுள்ளது. நாளைமறுதினம் மருதங்கேணி, பளை ஆகிய பிரதேச செயலகங்களில் முற்பகல் 9 மணிதொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரையும் வழங்கப்படவுள்ளது.

(த-405) (24)




## முள்ளியவளை பிரதான வீதி அகலமாகிறது

பரந்தன்,ஏப்.7

முள்ளியவளை பிரதான வீதி அகலமாக்கப்படவுள்ளதால், அந்தவீதியில் புதிய கட்டடங்கள் அமைப்பவர்கள் பிரதேச சபையினரின் அனுமதியைப் பெறவேண்டும்.

- இவ்வாறு தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

முள்ளியவளைப் பிரதேசத்தில் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முள்ளியவளை காட்டு விநாயகர் சந்தியில் இருந்து மூன்றாம் கட்டை மஞ்சள் பாலம் வரையான பிரதான வீதி அகலப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக குறிப்பிட்ட வீதியின் இருமருங்கிலும் 66 அடிவரை அகலமாக்கப்படவுள்ளது. இந்த அளவுத் திட்டத்திற்கு அமைவாக காணி உரிமையாளர்கள் காணிகளை விட்டுக்கொடுப்புச் செய்யுமாறும் நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர்.

(ஒ-352-202)

## துணுக்காய் கோட்ட மாணவரின் அறநூல் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் துணுக்காய் கல்வி வலயத்தின் ஆதரவுடன் துணுக்காய் கோட்டப் பாடசாலைக்கிடையில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த மாதம் மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டன.

அந்த முடிவுகள் வருமாறு:-

பிரிவு 01

முதலாம் இடம் சி.தரணிகா (துணுக்காய் அ.த.க.பாடசாலை), இரண்டாம் இடம் கி.சர்வாங்கி (யோகபுரம் மகாவித்தியாலயம்), மூன்றாம் இடம் கு.குவேனிகா (யோகபுரம் மகாவித்தியாலயம்)

பிரிவு 02

முதலாம் இடம் நா.அச்சுதன் (யோகபுரம் மகாவித்தியாலயம்), இரண்டாம் இடம் சி.பிரியங்கன் (யோகபுரம் மகாவித்தியாலயம்), மூன்றாம் இடம் ஸ்ரீ.கிருசாந்த் (துணுக்காய் அ.த.க.பாடசாலை).

பிரிவு 03

முதலாம் இடம் த.மிதுஜினி (துணுக்காய் அ.த.க.பாடசாலை), இரண்டாம் இடம் ச.தேனுசா (துணுக்காய் அ.த.க.பாடசாலை), மூன்றாம் இடம் க.அனுஷா (மல்லாவி மத்திய கல்லூரி).

பிரிவு 04

முதலாம் இடம் ம.திலீபனா (ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலை), இரண்டாம் இடம் இ.தேவனா (மல்லாவி மத்திய கல்லூரி), மூன்றாம் இடம் க.லஜிந்தா (துணுக்காய் அ.த.க.பாடசாலை).

(த.322)(23)

## அன்னை பூபதி நினைவு தினம்

பரந்தன்,ஏப்.7

தியாகி அன்னை பூபதியின் 18ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவு கல்லூரியில் நடைபெற்றன.

நிகழ்வில் பொதுச் சுடரை தூயவன் அரசறிவியற் கல்லூரி பொறுப்பாளர் பார்த்தீபன் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகள் பத்திரிகையின் பொறுப்பாளர் அன்புமணி ஏற்றினார். அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான சுடரை கல்விப் பிரிவின் துணைப் பொறுப்பாளர் ஜெயந்தி ஏற்றினார். மலர்மாலையைக் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் குமரன் அணிவித்தார். நினைவுரையைப் போராளி விதுரா நிகழ்த்தினார்.

(ஒ-352-202)(24)

### வனவளப் பாதுகாப்புப் பிரிவின் அனுசரணையுடன்

# புலிகளின் குரல் நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசளிப்பு

வட்டக்கச்சி,ஏப்.7

தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவின் அனுசரணையுடன் புலிகளின் குரல் நிறுவனத்தால் பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட 'இயற்கை எமது நண்பன்' எனும் தலைப்பிலான சூழல் விழிப்புணர்வு தொடர்பான கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த 2ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு புலிகளின் குரல் நிறுவன நடுவப் பணிமனையிலுள்ள அமலன் அரங்கில் நடைபெற்றது.

புலிகளின் குரல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை புலிகளின் குரல் நிறுவன நிர்வாக இணைப்பாளர் இரஜேஸ்வரன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினைப் புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஏற்றிவைத்தார்.

பொது மாவீரர் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினைத் தமிழீழ வானொலி இணைப்பாளர் திருமாறன் ஏற்றினார். மலர் மாலையினை தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவின் திட்டமிடல் ஆலோசகர் திருநாவுக்கரசு அணிவித்தார்.

வரவேற்புரையை புலிகளின் குரல் அறிவிப்பாளர் கோகுலன் நிகழ்த்தினார். தொடர்ந்து வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டது.

கருத்துரையினை வனவளப் பாதுகாப்புப் பிரிவுத் திட்டமிடல் ஆலோசகர் திருநாவுக்கரசு, புலிகளின் குரல் பிரதம செய்தி ஆசிரியர் தி.தவபாலன் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் நிகழ்த்தினார். நன்றியுரையினைப் புலிகளின் குரல் கலைப் பிரிவு மேலாளர் கபிலன் நிகழ்த்தினார்.

(த-405)(24)

## கால்நடை வளர்ப்போருக்கு நிதியுதவி

பரந்தன்,ஏப்.7

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் அக்கராயன் பிரதேச யூனியன்குளம், கோணாவில், காந்திகிராமம் ஆகிய கிராமங்களில் கால்நடை வளர்ப்போரில் 20 பேருக்கு இரண்டாம் கட்ட நிதியுதவியாக தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-352)(32)

# அன்னை பூபதியின் நினைவாக பொது இடங்கள் சிரமதானம்

புதுக்குடியிருப்பு,ஏப்.7

அன்னை பூபதியினதும் நாட்டுப்பற்றாளர்களினதும் நினைவுநாள் பிரதேச ரீதியாகவும் கிராம ரீதியாகவும் எழுச்சியாக முன்னெடுக்கப்படுகிறது. இதனையொட்டி கிராம ரீதியாகப் பல்வேறு பணிகள் நடைபெறுகின்றன.

பொது இடங்கள் பல சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இரணைப்பாலை கிராமத்தில் கிராம மக்களால் பல பொது இடங்கள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தைச் சூழ உள்ள பகுதிகள் வீதிகள் என்பன முல்லைத்தீவு மாவட்டப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் துப்புரவு செய்யப்பட்டது. இதில் சுமார் 70இற்கு மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர்.

கைவேலியில் அமைந்துள்ள செந்தமிழன் முன்பள்ளியும் அதனைச் சூழவுள்ள பகுதியும் கைவேலிக் கிராம மக்கள், பெற்றோர்கள் சிரமாதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. தொடர்ச்சியாக ஒவ்வொரு கிராமத்திலும் அந்தக் கிராம மக்களினால் பொது இடங்கள், வீதிகள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

பொது இடங்களில் அன்னை பூபதியின் படங்கள் வைக்கப்பட்டு தேசியக் கொடி ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகளும் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. அந்தப் பிரதேசங்களில் நாட்டுப்பற்றாளர்களானவர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு கௌரவிப்பும் நிகழ்கின்றது.

(த-353) (24)



மாதர்பணிக்க மகிழங்குளம் முன்பள்ளி எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கிவருகின்றது. முன்பள்ளியின் தோற்றத்தையும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர் மற்றும் மாணவர்களையும் படத்தில் காணலாம்.

(படம்: புளியங்குளம் செய்தியாளர்)

# ஆழிப்பேரலை பாதித்தவர்களுக்கு முல்லைத்தீவில் நிரந்தர வீடுகள்

புதுக்குடியிருப்பு,ஏப்.7

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கென 25 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு மெதடிஸ்த திருச்சபை முன்வந்துள்ளது.

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மெதடிஸ்த திருச்சபையினரால் கள்ளப்பாடு வடக்கு கிராமத்தில் வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த மாதம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை மெடிஸ்த திருச் சபையின் வன்னிக்கான குருமுதல்வர் வண.கே.கே.ஞானரூபன் அடிகளார், வண. மறைதாசன், பயனாளிகளில் ஒருவரான நா. சிவலோகநாதன் ஆகியோர் அடிக்கல்லை நட்டுவைத்தனர்.


தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித ஆழிப்பேரலை மீள்கட்டமைப்புப் பணிகளுக்கு அமைவாக இவ்வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

மெதடிஸ்த திருச்சபையின் நிதியுதவியுடனேயே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இவ் வீடுகளை அமைக்கவுள்ளன.

(ஒ-353-203) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய் குருதேவ்



உலகப் புகழ்பெற்ற ஆன்மீகக் குரு
தவத்திரு
ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்
அவர்கள்
யாழ். மண்ணில்
காலடி எடுத்து வைக்கும்
இந்நாளில்
அவரை இருகரம் கூப்பி
வரவேற்கின்றோம்.

'வற்றி......
வரண்டு......
நலிந்த எங்களிற்கு
கருணை பொழிந்து
காருண்யம் காட்டிட - உம்
பாதங்களை எம் மண்ணிலும் பதித்தீர்
பதித்த பாதங்களைக் கண்களில் ஒற்றி
அளவில்லாத ஆனந்தத்தை
பருகி சுவைத்து நிற்கின்றோம் - அவ்
அகம் நிறைந்த மகிழ்வோடு
வருக வருக எனப் பூரித்து நிற்கின்றோம்'

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை சமூகம்
யாழ்ப்பாணம்.

அனுசரணை வழங்குவோர்

| | |
|---|---|
| வினோ நகைப் பூங்கா | சாரங்கா நகை மாடம் |
| சிவகணேசன் ஸ்ரோர்ஸ் | லிங்கன் கிறீம் கவுஸ் |
| மகாராணி பட்டுச்சோலை | மிலேனியம் பேஷன் |
| எரிக் கணேஸ் | லிங்கநாதன் & Co. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தின் பல்வேறு வடிவங்களில் ஒன்றாக தேர்தல்களையும் அணுகுவோம்!

## வேட்பாளர் ஒன்றுகூடலில் பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. தெரிவிப்பு



பளை,ஏப்.7

எங்களுடைய தேசியத்தின் பற்றுறுதியை மீண்டும் சர்வதேச நாடுகளுக்குக் காட்டுகின்ற சந்தர்ப்பமாகவே உள்ளூராட்சித் தேர்தலைப் பார்க்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

கடந்த முதலாம் திகதி பளை மத்திய கல்லூரியில் நடைபெற்ற யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழரசுக் கட்சி வேட்பாளர்களின் ஒன்றுகூடல் வைபவத்தில் உரையாற்றிய போதே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வடிவங்களில் ஒன்றாகத்தான் தேர்தல்களைப் பார்க்கின்றேன்.

ஜே.வி.பி., ஹெல உறுமய என்பன முழுக்க முழுக்க இனவாதத்தையே நம்பி இருந்து குரல் எழுப்பிக் கடைசியில் படுதோல்வி அடைந்தன. இதன்மூலம் தெற்கில் இனவாதத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது.

இனவாதம் ஒருபோதுமே வெற்றிபெற முடியாது என்பதைத்தான் தென்னிலங்கை தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டியுள்ளன.

எங்களைப் பொறுத்தவரையில் இந்த முடிவு தன்னம்பிக்கையையும் துணிவையும் ஏற்படுத்தி உள்ளது என்றே கூறலாம். இந்தத் தன்னம்பிக்கையோடும் துணிவோடும் நாங்கள் எமது தேசியத்தை மற்றும் ஒருமுறை இந்த உலகத்துக்குத் தேர்தல் மூலம் எடுத்துக் காட்ட வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னும் ஆறு மாதங்கள்தான் உள்ளன என்று கூட நாங்கள் திடமாகச் சொல்லமுடியாது. எங்களை வீழ்த்துவதற்கு வெவ்வேறு விதமான சதிகள் முன்னெடுக்கப்படலாம். எனவே, அடுத்த மாதம் தேர்தல் நடைபெறுமாக இருந்தால்கூட அதற்கு நாங்கள் தயாராக இருக்க வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல் மூலம் கிழக்கு மாகாணத்தில் பெரிய வெற்றியை அடைந்துள்ளோம். இந்த வெற்றியை மக்களிடம் சென்று தேடிய வெற்றி என்று சொல்ல முடியாது. அதற்கான அத்திபாரம் எப்போதே இடப்பட்டுவிட்டது. அங்கு உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களுக்குச் சந்தர்ப்பம் இருந்திருக்கவில்லை. தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற அங்கலாய்ப்புடன்தான் அவர்கள் இருந்தார்கள். அதன் பின்னர் திடீரெனத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட பின்புதான் அவர்களால் இயன்ற அளவு பரப்புரை வேலைகளைச் செய்யமுடிந்தது என்று கூற முடியும்.

உள்ளூராட்சித் தேர்தலில் பெண் வேட்பாளர்களுக்கு கணிசமான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பெண்களால் சாதிக்கமுடியும். சமூகத்தில் பல நல்ல காரியங்களை ஆற்றமுடியும். இதனை தமிழ்ப் பெண்கள் எப்போதோ நிலைநாட்டி விட்டனர். விடுதலைப் போரில் எமது பெண்கள் உலகம் வியக்கும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். அரசியல் வேலைத்திட்டங்களிலும் அவர்கள் தீவிரமாக ஈடுபட இப்போது வழி ஏற்பட்டிருக்கிறது - இப்படித் தெரிவித்தார் பத்மினி சிதம்பரநாதன். (ஐ-7)

# மருந்தகங்களில் செஞ்சிலுவைக் குறியீடு; சர்வதேச விதிமுறைக்கு முரணானது

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

சில மருந்தகங்களின் பெயர்ப்பலகைகளில் செஞ்சிலைக் குறியீடு பயன்படுத்தப்படுகிறது. சர்வதேச விதிமுறைகளின் கீழ் இது தவறான நடைமுறையாகும். மருந்தகங்களில், பச்சைச் சிலுவைக் குறியீடே பயன்படுத்தப்படவேண்டும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக உதவிப் பேராளர்களின் தலைவர் ஐரின் புளுகிஜர் அம்மையார் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ளவர்களான ஐரின் புளுகிஜர் அம்மையார், பாதுகாப்புப் பேராளர் இன்ஸ்கே அம்மையார், பாதுகாப்பு அதிகாரியான கென்ய நாட்டைச் சேர்ந்த கே.மஜீத் ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர். யாழ். அலுவலகச் செய்தித் தொடர்பாளர் சில்வெஸ்டர் வேர்திங்டன், தலைமை அலுவலகத் தகவல் அதிகாரி வில்லியம் சுகுமார் ரொக்லூட் ஆகியோரும் உடனிருந்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தோற்றம், ஆணை அதிகாரம், செயற்பாடுகள் ஆகியவை குறித்து அதிகாரிகள் விளக்கமளித்தனர். பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு புதிய அதிகாரிகள் பதிலளித்தனர்.

அப்போதுஅவர்கள் கூறியதாவது:-

ஏ-9 பாதை ஊடான போக்குவரத்து நேரத்தை அதிகரிக்க விடுதலைப் புலிகளும் அரசுத் தரப்பும் இணங்கி எம்மை உத்தியோக பூர்வமாக அழைத்தால் எமது பிரசன்ன நேரத்தை அதிகரிப்பது குறித்து பரிசீலிப்போம்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அரசசார்பற்ற நிறுவனம் என்ற வரையறைக்குள் அடங்காத அமைப்பாகும். எமக்கு நிதியுதவி வழங்குபவர்கள் பல்வேறு வகைகளில் கண்காணிப்பை மேற்கொள்கின்றார்கள். நாம் ஒருவருடத்துக்கு முன்பே செயற்றிட்டங்களுக்கான அறிக்கையைத் தயார்செய்து நிதியுதவிக்காகச் சமர்ப்பிக்கின்றோம். பின்னர் மீளாய்வுக்குட்படுத்தி திட்டமிட்டு நிதியைச் செலவிடுகின்றோம். அதனால் எமது நிதி சரியான வழியில் உரிய இடங்களை அடைவது உறுதிப்படுத்தப்படுகிறது.

எங்கள் ஆணை அதிகார வரம்பிற்குள் நின்றே எம்மால் பணியாற்றமுடியும். காணாமற்போனவர்கள் குறித்த முறைப்பாடுகளில் சம்பந்தப்பட்ட தரப்புகளைத் தொடர்பு கொண்டு தகவலறிந்து உறவினர்களுக்குத் தெரிவிக்கின்றோம். இரகசியம் பேணப்படுவது அவசியமாகையால் இத்தகைய நடவடிக்கைகள் குறித்துப் பகிரங்கப்படுத்த முடியாது.

ஹர்த்தால் போன்றவை நடைபெறும்போது பயண வசதியின்றி முகமாலை போன்ற இடங்களில் தவிப்பவர்களுக்குப் பயண வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமக்கு ஆணை அதிகாரம் கிடையாது.

செஞ்சிலுவை மற்றும் செம்பிறைக் குறியீடுகள் சர்வதேச விதிகளின் படி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிற்குப் பிரத்தியேகமானவை. அவற்றை வேறு இடங்களில் பிறர் பயன்படுத்துவது விதிகளுக்கு முரணானதாகும். சில மருந்தகங்களில் குறிப்பாகப் பெயர்ப்பலகைகளில் வெள்ளை நிறப் பின்னணியில் செஞ்சிலுவைக் குறியீடு பயன்படுத்தப்படுகின்றது. இதுவும் தவறானதாகும். மருந்தகங்களில் பச்சை நிறக் குறியீடே பயன்படுத்தமுடியும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பணியாற்றும் நாடுகள் வேறுபட்டாலும் பிரச்சினைகள் பொதுவானவையாகவே உள்ளன. அதனால் குறிப்பிட்ட நாட்டுக்கென பிரத்தியேக ஆணை அதிகாரத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வகுக்கத் தேவையில்லை. தற்போதுள்ள சர்வதேச ஆணைய அதிகாரத்தின் கீழேயே போதுமான சேவையாற்ற முடியும் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (ஒ)(24)

## குருபூசை நிகழ்வு

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய இந்துமாமன்றம் நடத்தும் தவத்திரு சிவயோக சுவாமிகள் குருபூசை நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் செல்வி செள.கபிலா தலைமையில் இடம்பெறவுள்ளது.

பூசை வழிபாடுகள், நற்சிந்தனைப் பாடல், ஆசியுரை, வரவேற்புரை, தலைமையுரை என்பன இடம் பெற்று, மாணவர்களின் பேச்சு, சிறப்புச் சொற்பொழிவாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் கா.கமலநாதனின் சொற்பொழிவு என்பவையும் இடம்பெறும்.

தொடர்ந்து சித்தர்களில் யோகர் என்ற தலைப்பில் பாடசாலை அதிபர் திருமதி வ. சிவபாலன் கருத்துரை வழங்கவுள்ளார். நன்றியுரையோடு மதியம் மாகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (த-49)(23)

# மத்திய கிழக்கில் பணிபுரிவோரின் குடும்ப விவரங்கள் இங்கு சேகரிப்பு

கரவெட்டி,ஏப் 7

மத்திய கிழக்கில் பணிபுரிகின்றவர்களின் குடும்ப விவரங்கள் பிரதேச செயலக பிரிவு ரீதியாகத் திரட்டப்பட உள்ளன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிகின்றவர்களின் குடும்பங்களுக்கான நலன்புரித் திட்டங்களைத் தென்பகுதியில் ஏற்கனவே செயற்படுத்தி வருகின்றது. இத் திட்டங்களை யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் விஸ்தரிக்குமுகமாக முதற்கட்டமாக குறித்த குடும்பங்களை இனங்காண்பதற்காகத் தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் நியமிக்கப்பட்டுள்ள மனித வள அபிவிருத்தி உதவியாளர்கள் மூலமாகப் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தத்தம் பிரதேச செயலகங்களில் ஒரு வார காலத்தினுள் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்ட குடும்பங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-70)(23)

# உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர் தாக்கப்பட்டமை: விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்பணிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ். உயர் தொழில்நுட்பநிறுவனத்தினுள் மாணவர்கள் தாக்குதலுக்குள்ளாகியமை மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் அடித்து நொருக்கப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்ட படையினரிடம் விசாரணை நடத்தி உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோப்பாய் பொலீஸாருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்குள் அத்துமீறி நுழைந்த படையினர் மாணவர்களைக் கடுமையாகத் தாக்கியதுடன் சொத்துக்களையும் சேதமாக்கியமை குறித்து மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி றோகித பிரியதர்ஷன சம்பந்தப்பட்ட படையினரிடம் விசாரணைகளை மேற்கொண்டு உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோப்பாய் பொலீஸாரைக்கேட்டுள்ளார். (எ-13)(27)

# நெடுந்தீவுக்கு புதிய அம்புலன்ஸ் படகு 11ஆம் திகதி முதல் களம் இறங்குகிறது

நல்லூர்,ஏப்.7

நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்த நோயாளருக்கான அம்புலன்ஸ் படகுச் சேவை எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்படும் என யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நெடுந்தீவு வைத்தியசாலைக்கென 'கியூ மெடிக்கா' நிறுவனம் 15 மில்லியன் ரூபா பெறுமதியான அம்புலன்ஸ் மோட்டார் படகை வழங்கியுள்ளது.

11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7மணிக்கு குறிகாட்டுவான் துறைமுகத்தில் வைத்து படகுச்சேவை ஆரம்பித்து வைக்கப்படும். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஸ், சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரன், 'கியூமெடிக்கா' நிறுவன அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார்கள். (த-111)(27)

# தவக்காலச் சிந்தனை 38

## எம்மை ஒறுத்து பிறர் நலம் பேணுவோம்

நன்மைக்கும் காலமில்லை என்பார்கள். இன்று எவ்வளவுதான் பிறருக்கு நாம் நன்மை செய்தாலும் அதைச் சிலர் ஏற்பதில்லை. மாறாக நன்மை செய்பவரை எதிர்ப்பதும் அவர்களை வஞ்சம் தீர்ப்பதும்தான் தற்போது நம் மத்தியில் நிலவி வருகின்றது. நம்மை எதிர்ப்பவர்களையும் நமக்குத் தீமை செய்பவர்களையும் நாம் மன்னித்து வாழவேண்டும் என்பதுதான் நமக்கு இயேசு புகட்டிய பாடம். அதற்கு அவரே உதாரணம்.

கி.பி. 1832ஆம் ஆண்டு பிரான்ஸில் கொலரா தொற்று நோய் பரவியது. பிறருக்கு உதவுவதையே தனது குறிக்கோளாகக் கொண்ட சகோதரி ஒருவர் மருத்துவமனைக்குச் சென்றுகொண்டிருந்தபோது ஒரு கொடூரமான மனிதன் அவரைப் பின்தொடர்ந்து சென்று தகாத வார்த்தைகளால் திட்டினார். அருகிலிருந்தவர்கள் தடுக்கவில்லை. காரணம் அவன் முரடன். சில நாள்களுக்குப் பின் புதிய நோயாளி ஒருவரை மருத்துவமனைக்குக் கொண்டு வந்தார்கள். மருத்துவமனையில் சிறிதும் இடமில்லை என வாயில் காப்பாளர் கூறினார். புதிய நோயாளி மரியாவைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவர்தான் அவமரியாதையாகப் பேசியவர். எப்படியேனும் சிறு இடம் கொடுக்கிறேன். நானே பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி இரவும் பகலும் அருகிலிருந்து கவனித்துக்கொண்டார். சிகிச்சை பலனளிக்காமல் பலர் இறந்தனர். எட்டு நாள்களுக்குப் பின் நோயாளி ஆபத்திலிருந்து விடுபட்ட போது புதிய சகோதரி உதவி செய்ய வந்தார். சகோதரி மரியா எங்கே என்று கேட்க காவலரால் தாக்கப்பட்டு இரவு இறந்துபோனார் என்றார்.

சகோதரி மரியா தம்மை எதிர்த்தவருக்கு அன்பு காட்டினார். நாமும் இந்தத் தவக்காலத்தில் எம்மை ஒறுத்து பிறருக்கு எம்மாலான உதவிகளை உண்மை அன்புடன் செய்ய முற்படுவோம். [illegible] செயலிலும் இறைவனை மற்றவர் கண்டுகொள்ளும்படி நடந்துகொள்ள முற்படுவோம்.

ம.நியூட்டன், சில்லாலை.

# அவசர குடிதண்ணீர் திட்டங்களுக்கு செஞ்சிலுவைச் சம்மேளனம் உதவும்

யாழ்ப்பாணம்,ஏப்.7

குடாநாட்டில் சில அவசரமான குடிதண்ணீர்த் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான உதவிகளை வழங்க செஞ்சிலுவைக் குழுக்களின் சர்வதேச சம்மேளனம் முன்வந்துள்ளது.

குடாநாட்டில் நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின்படி சில அவசரத் திட்டங்களைத் தீவகம் உள்ளிட்ட சகல பிரதேசங்களிலும் நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான உதவிகளை செஞ்சிலுவைக் குழுக்களின் சர்வதேச சம்மேளனம் செய்யவுள்ளது.

இது தொடர்பான செயற்பாடுகளை நீர் வழங்கும் அதிகா[illegible] மேற்கொள்வர். (த-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய்குருதேவ்




# உலக சமாதான குருவே வருக! வருக!!







உலகம் போற்றும் தமிழ்த்துறவி

தவத்திரு

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்

அவர்கள்

இன்று யாழ்ப்பாணம் வருகை

## மகாசத்சங்கம்

இடம்:- யாழ். இந்துக் கல்லூரி மைதானம்

நேரம்:- மாலை 5.30 மணி

### வாழும் கலை அன்பர்கள்

யோகநாதன் குடும்பம்
வி. சந்திரலேகா குடும்பம்
ப. கௌசல்யா குடும்பம்
க.சிவகுமாரன் குடும்பம்
ப.தீனபந் குடும்பம்
தவரதன் குடும்பம்
ரவி சாந்தி குடும்பம்
சங்கீதா கு டும்பம்
டயானா குடும்பம்
செல்லக்குட்டி குடும்பம்
சிவப்பிரகாசம் குடும்பம்
தர்மலிங்கம் குடும்பம்
லக்ஸ்மன் குடும்பம்
நிஷாகரன் குடும்பம்
வி. ஸ்ரீவிக்கினேஸ்வரன் குடும்பம்
திலீபன் குடும்பம்
கஜேந்திரன் குடும்பம்
கெங்காதரன் குடும்பம்
ஆதித்தன் குடும்பம்
தேவகுமாரன் குடும்பம்
சச்சிதானந்தன் குடும்பம்
நந்தீஸ்வரன் குடும்பம்
திருமதி பவாணி மருதவாணர் குடும்பம்
சிவஜீவன் குடும்பம்

அனைவரும் வருக! அருளாசி பெறுக!!

(அனுமதி இலவசம்)

நிகழ்ச்சி நிறைவில் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCY NOTICE - UNHCR

**Post title:** Field assistant (National UNV)

**Duty station:** Kilinochchi

**Requirements:**

- A thorough knowledge of humanitarian aid and development - orientated organizations in the Kilinochchi and Mullaitivu Districts.
- Highly developed written and spoken English and local languages.
- Experience in developing databases and managing information.
- Ability to work on individual protection cases.
- Ability to work closely with a variety of actors, local authorities and directly with the beneficiary population.

Please contact UNHCR to obtain more information on job description and application procedure.

(C/48713)(32)


# உலக வங்கி வீடமைப்புத் திட்ட ஆளணியினருக்கு பயிற்சி வழங்கும் திட்டம் நாளை ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஏப்.7

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் வள ஆளணியினருக்கான பயிற்றுநரை பயிற்றுவிக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி பயிற்சித் திட்டத்தின் முதற்கட்டமாக, நாளை சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் பயிற்சி ஆரம்பமாகும்.

யாழ்.மாவட்ட திட்ட முகாமைத்துவ அலகின் தகவல் கல்வி தொடர்பாடல் ஆலோசகர், சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இத்திட்டத்தின் பிரதேச மட்ட இணைப்பாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராமிய புனரமைப்புக் குழுப் பிரதிநிதிகள் ஆகியோர் இப்பயிற்சித் திட்டத்தில் இணைந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் மாதிரித் திட்டம் தரும் பாடமும் அனுபவமும் தொடர்பாகவும் தகவல் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றியும் மற்றும் சூழலியல் தொடர்பாகவும் இந்தப் பயிற்சித் திட்டத்தில் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

(எ-13)(32)

# பொதுக்கூட்டம்

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவு கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாச வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் வலி. தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி, வலி.தென்மேற்கு பிரதேச செலயக பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திராசுதாகர் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

(எ-135)(32)


## ஹோட்டல் வேலைக்கு ஆள் தேவை

1. ரீ மேக்கர்
2. ரொட்டி மேக்கர்
3. சப்ளையர்ஸ்
4. சமையல் உதவியாளர்
5. ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்

தொடர்பு:
**திறீ ஸ்ரார் ஹோட்டல்,**
*162, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(ச/48782) (82-16-17)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள்

1) பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி I -2002
2) சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி I -2002
3) சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி III -2002

மேற்படி பரீட்சைகளை 20.04.2006 வியாழக்கிழமை தொடக்கம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 17.04.2006 தொடக்கம் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

### செய்முறைப் பரீட்சை

**பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி - II - 2002**
**(வெளிவாரி)**
**நாடகமும் அரங்கியலும் (EX.DTAG.3.2)**

மேற்படி தேர்வுக்கான செய்முறைப் பரீட்சையை 25.04.2006 மற்றும் 26.04.2006 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சை அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுட, செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: - செய்முறைப்பரீட்சை முடிவடைந்ததும் பரீட்சை அனுமதி அட்டையை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விவரங்களுக்கு: 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

06.04.2006. (சி/48733) (22-32-17-15) பதிவாளர்.

## யாழ்ப்பாணம்

## வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத
## ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்
*(வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்)*

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(08.04.2006 சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத் தேர் வெள்ளோட்டம்)

| | | |
|---|---|---|
| 08.04.2006 | சனிக்கிழமை | மாலை 4.30 மணி- சித்திரத்தேர் வெள்ளோட்டம் |
| | | மாலை 7 மணி-பெரிய சப்பரம் |
| 09.04.2006 | ஞாயிற்றுக்கிழமை | மாலை 3 மணி- பிஷாடணர் உற்சவம் |
| 10.04.2006 | திங்கட்கிழமை | காலை 8 மணி - வசந்தமண்டபப்பூசை |
| | | மு.ப. 10 மணி - பஞ்சரதாரோகணம் |
| 11.04.2006 | செவ்வாய்க்கிழமை | மு.ப. 11 மணி - தீர்த்தோற்சவம் |
| 12.04.2006 | புதன்கிழமை | பி.ப. 4 மணி - கன்னி ஊஞ்சல் |
| | | (பூங்காவனம்) திருக்கல்யாணம் |
| 13.04.2006 | வியாழக்கிழமை | மாலை 5மணி - சண்டேஸ்வரர் உற்சவம் |

புதிய சித்திரத்தேர் நிர்மாணித்த கலைஞர்கள்
பருத்தித்துறை மாதனையூர் ஸ்ரீ காளியம்மன்
சிற்பக்கலையகத்தின் கலைஞர்கள்
ஸ்பதி- *மாதனையூர்*
**திரு.வேலுப்பிள்ளை கார்த்திகேசு**
ஆச்சாரி அவர்களுடன்
**திரு.பழனிவேலு ஆறுமுகநாதன்**
**திரு. தியாகராசா சபாநாதன்**
**திரு.நடராசா சுகந்தன்**

வர்ணவேலை: **திரு. சேகர்**
*(வண்ணை வைத்தீஸ்வரர் கோயில்)*

**திரு.க.வைத்திலிங்கச் செட்டியார்,**
தர்மகர்த்தா,
*வண்ணை- ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்.*

(ச.48784) (89-82-17-16)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை

*எமது* S.J.B.Trade Agency *இன் பங்காளிகளில் ஒருவரான*
**திரு.த.சிவசுப்பிரமணியம்**
(லீலா வெதுப்பக உரிமையாளர்)

அவர்களின் அன்புத் தந்தை சங்கானை, மாவடி வீதியைச் சேர்ந்த சி.தம்பிப்பிள்ளை அவர்கள் 05.04.2006 இல் இறைபதம் அடைந்த செய்திகேட்டு துயருறும் நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Partners and Staff,
S.J.B.Trade Agency,
Thinesh Bakery Building,
180, Jaffna Road, Manipay,
T.P.: 021[illegible]

(49066) (89-82-16-17)


## மலேசியாவில் ஆண்களுக்கான வேலைவாய்ப்புக்கள்

எங்கள் நிறுவனத்தின் மூலம் மலேசியா சென்று நன்கு பரீட்சிக்கப்பட்ட முன்னணி மர ஆலைகளில் வேலை வாய்ப்புக்கள்

**ஒரு மாதத்தில் பயணம்**

**1. தொழிலாளர் 50** RM 481

வேலையின் தன்மை : வீட்டுத்தளபாடங்கள் உற்பத்தி நிறுவனமொன்றில் தொழிலாளர்கள்
ஆரம்ப சம்பளம் (நாள் சம்பளம்) X 26 (நாட்கள்) 1850X26=48100
*தேவையான எண் : 50 *தங்குமிடம் இலவசம் *உணவு வழங்கப்படமாட்டாது.
*நாளாந்த வேலை 8 மணி நேரம் *சேவைக்காலம் 3 வருடங்கள்
*விடுமுறை ஞாயிறு மற்றும் அரச விடுமுறை நாட்கள் *மருத்துவ வசதி இலவசம்
*மாதாந்த, அரசாங்க அரச வரி (Levy) 100X12=1200
*ஒப்பந்த முடிவில் நாடு திரும்ப விமான டிக்கட் இலவசம்
வேலைவாய்ப்புக்கு செல்ல விரும்புவோர் தங்கள் பாஸ்போட்டை ஒப்படைக்க முன்னர் - வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் விவரங்களைப் பெறவும்.

பாஸ்போஸ்ட், சேவைச்சான்றிதழ், கலர் புகைப்படங்கள் 20 என்பனவற்றுடன் விண்ணப்பிக்கவும்.

## அஃப்ராஸ் என்டர்பிரைசஸ்

*இல. 476, D6 - D7 முதலாம் மாடி,*
*மருதானை சொப்பிங் சென்டர், மருதானை, கொழும்பு - 10.*
Labour Licence No: 1837
**Tel: 4714288, Mobile: 0777-589020**

AL 1837/Advt/01/06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்பு, மனத்தூய்மை .... மக்கள் சேவையில் மிகவும் அவசியம்

*சுவாமி சாந்தானந்தாவின் ஜெயந்தி தினம் இன்று. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.*

சிவந்த உடல் அதைச் சுற்றி காவியுடை. ஒளி பாய்ச்சும் கண்கள், நெற்றிப்புருவங்களுக்கிடையில் குங்குமப்பொட்டு மொத்தத்தில் செந்நிறமாகவே காட்சியளிக்கும் இந்த மகான் யார்? சாது தரிசனம் பாவ விமோசனம் எனும் கூற்றுக்கிணங்க எம்மை பாவங்களில் இருந்து விடுவித்து ஆட்கொள்ள வந்திருக்கும் இச் சாது யார்? எம்மேல் கருணை கொண்டு காட்சி தரும் இந்த அன்பு வடிவம் யார்?

ரிஷிகேசத்தில் துறவறத்தை மேற் கொண்ட பின்னர் மக்களுக்கு சேவை செய்ய, அவர்களைக் கரையேற்றப் புறப்பட்ட வேளையில் முதன் முதலில் எமது மண்ணுக்கு வருகை தந்து (1971) ஆத்மீகப் பயிற்சிகள், சமயச் சொற்பொழிவுகள், பலவற்றை நிகழ்த்தித் தனது கம்பீரமான காந்தம் போன்ற குரலினால் எம்மைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தி கவர்ந்திழுத்த இந்த மகான்தான் திவ்ய ஜீவன சங்க ஸ்தாபகர் சுவாமி சிவானந்தா சரஸ்வதி அவர்களின் பிரதம சிஷ்யர்களில் ஒருவராகிய சுவாமி சாந்தானந்தா சரஸ்வதி ஆவார். உலகளாவிய சிவா குடும்ப அமைப்பு **(Shiva family)**, மலேசியாவில் - கோலாலம்பூர், பினாங், ஜோகோபார், மலாக்க விலும், சிங்கப்பூர், ஆஸ்திரேலியாவில் பேர்த், இந்தியாவில் சென்னை, கோயம்புத்தூர், இலங்கையில் கொழும்பு போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட நுண் கலைக்கோயில் **(Temaple of Fine Arts)**, அன்னலட்சுமி, லாவன்யா போன்றவற்றின் ஸ்தாபகரும் சுவாமி சாந்தனந்தாவே ஆவார்.

சுவாமிஜி அவர்கள் தென் இந்தியாவில் திருக்கோயிலூர் என்ற சிறிய கிராமம் ஒன்றில் அந்தணர் குடும்பம் ஒன்றில் 07.04.1934 அன்று அவதரித்தார். பெற்றோர் இவருக்குச் சூட்டிய பெயர் சந்திரசேகரன் என்பதாகும். இளமையில் விவேகமும் சங்கீத ஞானமும் ஒருங்கே கைவரப்பெற்ற சந்திரசேகரன் திருக்கோயிலூரில் ஆச்சிரமம் அமைத்து தெய்வத் தொண்டாற்றி வந்த மகான் ஞானானந்த கிரியை அடிக்கடி சென்று தரிசித்து வந்ததுடன் அவரிடம் பல பாடல்களையும் பயின்று வந்தார். அவரின் உள்ளக் கிடக்கையை கண்ணுற்ற சுவாமி ஞானானந்த கிரி இவரை ரிஷிகேசத்திற்கு சுவாமி சிவானந்தா சரஸ்வதியிடம் அனுப்பத் திருவுளங் கொண்டார்கள். வயது 14 இல் இருந்து உள் ஒலி அவரை வழி நடத்தத் தொடங்கிய. அதற்கேற்ப சுவாமி சிவானந்தரிடம் சன்னியாசம் பெற்று துறவியாக மாற முடிவுசெய்தார்.



ஒரு நாள் சந்திரசேகரன் ஞானானந்தகிரி சுவாமிகளின் ஆச்சிரமத்தில் இருந்து ஓடோடி வந்து என்றுமில்லாதவாறு தனது தாயாரிடம் பசிக்கிறது உணவுபோடு என்று அவசர அவசரமாக வற்புறுத்தினார். கணவனுக்கு உணவு பரிமாறிய பின்னரே ஏனையோர் உணவை எடுத்துக்கொள்ளும் வழக்கம் இக் குடும்பத்தில் நிலவியதால் ஒரு கணம் தயங்கிய அம்மை யார் பின்னர் ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு இவருக்கு உணவு பரிமாறினாராம். அவசரமாக உணவை உட்கொண்ட சந்திரசேகரன் உடனேயே ரிஷி கேஷத்துக்கு கிளம்பிவிட்டார். அன்றைக்குத் தான் அம்மையார் இவரை மகன் முறையில் கடைசியாகச் சந்தித்தாராம்.

சுவாமி சிவானந்தரிடம் முறையாகத் துறவறம் பெற்றுக் கொண்ட சந்திரசேகரன் சுவாமி சாந்தானந்தா என்னும் துறவுப் பெயரைப் பெற்றார். ரிஷிகேசத்தில் தன் குருவுக்குப் பணிவிடை செய்வதைப் பெரிய பேறாகக் கருதிய இவர், சமைப்பதற்கு உதவுவது முதல் காரியாலய வேலை வரை ஓய்வொழிவின்றி செய்வார். குருவிடம் அளப்பரிய அன்பும் பக்தியும் கொண்டிருந்த இவர் தன் குருவிடம் தன் தேவைகளையிட்டோ அல்லது வேறு பிரச்சினைகள் பற்றியோ என்றுமே வாய் திறந்து கேட்டதேயில்லை என்று கூறியுள்ளார். குருவையே தன் முழு முதல் தெய்வமாகப் போற்றும் இவர் குருதேவர் மேல் பல பாடல்களைப் புனைந்து பாடியுள்ளார்.

14 வருடங்கள் அர்ப்பணிப்புடனும் மனத் தூய்மையுடனும் .இவர் ஆற்றிய சேவைகளினாலும் மகிழ்வுற்றகுரு உனக்கு எக்காலத்தி லும் உணவு, உடை போன்றவற்றிற்கு குறைவிருக்காது என்று வாழ்த்தி ஆசீர்வதித்தாராம். இதனை அடிக்கடி நினைவு கூரும் சுவாமிஜி குருவை முற்றாக நம்பும் எவர்க்கும் இந்த ஆசீர்வாதம் கிட்டும் என்று கூறினார்.

சுவாமி சிவானந்தர் தன் கடைசிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது அவருக்கருகே இருந்து சேவையாற்ற இவருக்கே அனுமதியிருந்தது. அவர்களில் ஒருவர் சுவாமி சாந்தானந்தா மற்றவர் சுவாமி ஹிருதயானந்தா இவர் பெண் துறவி. டாக்டர் ஆக இருந்து துறவு பூண்டவர். (ஆதாரம் : சுவாமி முக்தானந்தா). 1965 இல் குருவின் மகா சமாதிக்குப் பின்னர் உள் ஒலி வழி நடத்தியதன் பிரகாரம் இந்தியாவில் சுற்றித் திரிந்து **(Wanderd)** சத்சங்கம் பலவற்றை நிகழ்த்தி வந்த சுவாமிஜி உலக மக்களை உய்விக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிடவே இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். முதன் முதலில் எமது நாட்டுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு 1971 இல் இடம்பெற்றது. கொழும்பில் சத்சங்கம் பலவற்றை நிகழ்த்திய பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் சுவாமிஜி தொடர்ச்சியாக 10 நாள்கள் காலையில் தியான வகுப்புகளும் மாலையில் சத்சங்கமும் நிகழ்த்தி வந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள பல பாடசாலைகளுக்கும் விஜயம் செய்து மாணவர் மத்தியில் ஆத்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியும் அன்பர்கள் பலர் புடைசூழ காரைநகர் கசுரினா கடற்கரைக்கு சமயச் சுற்றுலாவை மேற்கொண்டபோது வெண் மணல் பரப்பிலே அமர்ந்து பல இனிய பாடல்களைப் பாடியதும் என்றுமே மறக்க முடியாத நிகழ்வுகளாகும்.

இதன் பின்னர் பல தடவைகள் சுவாமிஜி கொழும்புக்கு வருகைதந்த பொழுதிலும் யாழ்ப்பாணத்திற்கு இன்னுமொரு தடவை மட்டுமே வருகை தந்தார்.

1979 இல் ஊரெழு கண்ணகை அம்மன் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ள வந்த சுவாமிஜி திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்திற்கும் வருகை தந்து பல இனிய தெய்வீகப் பாடல்களைப் பாடி ஆசீர்வதித்துச் சென்றமை என்றுமே இனிய நிகழ்வுகளாகும். ஊரெழு கண்ணகை அம்மன் ஆலய கும்பாபிஷேக முடிவில் 'எம்முடன் சம்பந்தமில்லாததை 'கோயிலில் கட்டி வைக்கவில்லை' என்ற பெ[illegible]ளில் அவர் ஆற்றிய சத்சங்க உரையு[illegible] 'கண்ணகை உந்தன் புன்னகை காலமெல்லாம் கடந்த மென்னகை...' என்று அவர் பாடிய பாடலும் மனதில் ஆழப் பதிந்த விடயங்களாகும்.

**இ. இராஜா மகேந்திரசிங்கம்**
**இயக்குநர், இராமகிருஷ்ணாலயம்.**

(22)

## மதுவிலக்கை வலியுறுத்தி குருநகரில் அமைதிப்பேரணி

யாழ்ப்பாணம், ஏப்.7

குருநகர் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து மதுவிலக்கு அமைதிப்பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்தப்பேரணி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகி யாழ். மாவட்ட செயலகத்தை வந்தடையும் அங்கு வைத்து யாழ். அரச அதிபரிடம் [illegible]ஜர் கையளிக்கப்படும்.

குருநகர் பிரதேசத்தில் புதித[illegible] அமைக்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையங்களை அகற்றக் கோரியே இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளது.

இந்தப் பேரணியில் பிரதேச மக்கள், பாடசாலை மாணவர்கள், சங்கங்கள் மற்றும் கழகங்களின் உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(எ-202) (27)

## யாழ். வலய கரப்பந்தாட்டம் ஞாயிறு அன்றே நடைபெறும்

யாழ். வலய பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளில் கரப்பந்தாட்டப் போட்டி முன்னர் அறிவித்த ஒழுங்கின் பிரகாரம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி நாளை சனிக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என்றும் -

தவிர்க்க முடியாத காரணத்தினால் போட்டிகள் ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் - யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) குமாரசுவாமி தெரிவித்தார்.

இதேவேளை -

வலைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் . திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் காலை 8 .30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அறிவிக்கப்பட்ட ஒழுங்கின் பிரகாரம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-202)

## பல்கலைக்குத் தகுதியான மாணவர்கள் விரைவில் இணைத்துக்கொள்ளப்படுவர்

கொழும்பு,ஏப்.7

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற அனைத்து மாணவர்களையும் இந்த வருடத்திலேயே இணைத்துக் கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சமரநாயக்கவின் தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவுப் பாடங்களிற்கான விடைத்தாள்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டபின்னர் வெளியான பெறுபேறுகளின் படி பல்கலைக்கழக அனுமதிக்கு மேலும் பல மாணவர்கள் தகுதி பெற்றனர்.

இவ்விடயம் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் ஆகியோருடன் உயர்கல்வி பிரதி அமைச்சர் றஞ்சித் சிம்பலாம்பிட்டிய ஆகியோர் கலந்துரையாடினர். அங்கு கருத்துத்தெரிவித்த உயர் கல்விப் பிரதி அமைச்சர், பல்கலைக் கழகங்களுக்குத் தேவையான மானியங்களை வழங்குவதற்கு உறுதி அளித்துள்ளார். (ஐ-12)


## 31ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்



மலர்வு 25.02.1927 உதிர்வு 08.03.2006

**அமரர் சுப்பிரமணியம் கயிலாயபிள்ளை**

(உரிமையாளர் ஈஸ்வரி ஸ்ரோர்ஸ்)
சந்தை உட்புறம் சாவகச்சேரி)

## 98ஆம் நாளில் உம்மை நினைவு கூருகின்றோம்



மலர்வு 05.01.1933 உதிர்வு 31.12.2005

**திருமதி புவனேஸ்வரி கயிலாயபிள்ளை**

*காசும் நிலையில்லை...*
*கன சொந்தமும் நிலையில்லை...*
*வீடும் நிலையில்லை...*
*விலையில்லை... பிறிதொன்றும்*
*ஏடு சுமந்தெமக்கு*
*ஒன்றும் இல்லை எனக்காட்டும்*
*தில்லைக் கூத்தன் பாதம்*
*வீடேநிலையென்று*
*விரைந்தாறிச் செல்வோம் நாம்.*

**"ஆறுபோல உங்கள் ஆன்மா ஓடி கடல் போல் இருக்கும் இறைவனோடு கலக்கட்டும்"**

399/2, சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(49084)
(54-15-45)

என்றும் உங்கள் நினைவுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



**ஜெய் குருதேவ்**
**உலகப் புகழ்பெற்ற ஆன்மீகக்குரு**
**தவத்திரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்**



*வாழ்வு என்பதை அன்பின் கலையென உணர வைத்த எம் இனிய குருவே வருக வருக!*

**நந்தா புடைவையகம்**
யாழ் வீதி, மானிப்பாய்.

(49077)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை மலரச் செய்யும் வாழும் கலைப் பயிற்சி







இன்று உலகம் முழுவதும் 147 நாடுகளில் கற்றுத்தரப்படும் வாழும் கலைப் பறிற்சி ''சுதர்சன கிரியா'' வை மகுடமணியாகக் கொண்டுள்ள எளிமையான மூச்சுப் பயிற்சியாகும். இந்து, கிறிஸ்தவர், முஸ்லிம் என்ற பேதம் இன்றி இந்தப் பயிற்சியைக் கற்றுக் கொண்டுள்ளனர்.

உலகம் முழுமையும் உள்ள அன்பர்களால் 'குருஜி' என்று அழைக்கப்படும். பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்கள் 13.05.1956 இல் தமிழ்நாட்டில் கும்பகோணம் அருகில் உள்ள பாபநாசத்தில் அவதரித்தவர். தனது தாத்தா பாராயணம் செய்து கொண்டிருந்த பகவத் கீதை சுலோகங்களைக் காதால் கேட்டு வந்தே தனது நான்காம் வயதில் பார்க்காமலேயே ஒப்புவித்தவர்.

18 வயதில் வேத-இதிகாசங்கள் அனைத்தையும் கற்றுணர்ந்து பட்டப் படிப்பையும் முடித்தார். 1982 இல் ஒரு சிவராத்திரியில் 10 நாள்கள் மௌனத்துடன் தவத்தில் இருக்கையில் அவருக்குள்ளிருந்த 'சுதர்ஸன கிரியா' எனும் அற்புதமான ஞானம் பிறந்தது.

சர்வதேச வாழும் கலை அந்நிறுவனம் குருஜி அவர்களால் ஸ்தாபிதம் செய்யப்பட்டு லர்பநோக்கம் அற்ற - அரசுசாரா- தொண்டு நிறுவனமாக ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எல்லா மதங்களின் அடிப்படைக் கோட்பாடான அன்பை மீண்டும் உலகம் முழுவதும் உயிர்ப்பித்தும் அமைதி, சமாதானத்தின் மகத்துவத்தை-சகோதரத்துவத்தை மலரச் செய்து வருகிறார். வாழும் கலையின் மூச்சு மற்றும் தியானப் பயிற்சிகள் உலக்ம் முழுவதிலும் 20 கோடிக்கும் மேலான மக்களுக்கு அமைதியையும், ஆனந்தத்தையும் தந்திருக்கிறது.

மேலும், இந்தப் பயிற்சிகள் இந்தியா, யு.எஸ்.ஏ., ரஷ்யா, ஸ்கன்டிநேவியா, கிரேட் பிரிட்டன், ஹொலன்ட், டென்மார்க், ஆஸ்திரியா, ஜேர்மனி, கிரோஷியா, தென் ஆபிரிக்கா என எண்ணற்ற நாடுகளில் 100இற்கும் மேலான சிறைச்சாலைகளில் சிறைக்குற்றவாளிகளை நல்வழிக்கு மாற்றியுள்ளது.

கருத்து வேறுபாடுகள் - உரையாடல்கள் குறித்து குருஜி அவர்கள் கூறும் போது, 'எண்ணங்கள், கருத்துக்கள், மனநோக்குகள், நம்பிக்கைகள் வெவ்வேறாகவுள்ள இருவரிடையே நடக்கும் பேச்சுவார்த்தைதான் உரையாடல். ஒருவர் மறுத்துப் பேசும் உரையாடல் இருக்க முடியும். வெவ்வேறு கருத்து உள்ளவர் சேரும் போதுதான் உண்மையான உரையாடல் நடக்கிறது. அறிவாற்றல் உள்ளவர்களிடையே அதிக வேறுபாடுகள் இருப்பதனால் தான் உலகம் மகிழ்ச்சியாக இருக்கிறது. வேறுபாடுகள் இல்லையானால் உலகம் சலிப்படைந்துவிடும்'' என்று கருத்துரை வழங்குகிறார்.'

## ஞானக்கதிர்

குருஜியிடம் கேட்கப்படும் எந்த கேள்விகளுக்கும் அறிவுபூர்வமான-ஆழமான வேடிக்கையான பதில்கள் வெளிப்படுவது ஓர் அற்புதமான அனுபவம்.

**கேள்வி:** வாழ்க்கையில் இலட்சியம் அவசியமா?

**ஸ்ரீஸ்ரீ:** இலக்கு வைத்துக் கொள்ளுங்கள். தண்ணீர் எங்கும் பெருகி இருக்கும்போது வெள்ளம். ஆனால் இருகரைகளுக்கிடையில் இருக்கும்போது ஆறாக ஓடுகிறது. வாழ்க்கையில் இலக்கு வைத்திருப்பது நல்லது. வாழ்வு நல்வழி வகுக்கப்பட்டுச் செல்லும். அப்போது உங்கள் உயிர்ச்சக்தி ஒருமுகப்படுத்தப்பட்டுச் செயற்படும்.

**கேள்வி:** எவ்வாறு குழந்தைகளைக் கையாள்வது மற்றும் அவர்கள் நல்லபழக்க வழக்கங்களை உடையவராகச் செய்வது?

**ஸ்ரீஸ்ரீ:** அவர்களுடைய நல்ல குணங்களைப் புகழுங்கள். நாம் அடிக்கடி இதற்கு நேர்மாறாகச் செய்கிறோம். நாம் அவர்களை அவர்களுடைய தவறான குணங்களை வைத்து, அவர்களை எவ்வளவு நோகவைக்க முடியுமோ அவ்வளவு நோக வைக்கிறோம். சில காலங்களுக்குப் பிறகு குழந்தை ''ஓ, நான் இப்படியாக இருக்கிறேனே,'' என்று வருந்த ஆரம்பித்து, அது மேன்மை அடைவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய் விடுகிறது.

**கேள்வி:** என் தொழிலில் நான் பொய் சொல்ல வேண்டியிருக்கிறது. அதை என்னால் செய்ய முடியவில்லை. தயவு செய்து நான் என்ன செய்யவேண்டும் என்று கூறுங்கள்.

**ஸ்ரீஸ்ரீ:** இந்த மனவேதனையே உங்களைப் பொய்சொல்ல வேண்டியதல்லாத சூழ்நிலைகளில் வைக்கும். உங்கள் திறமையை உபயோகியுங்கள். உணவில் உப்பு போல் அதைப் பயன்படுத்தலாம். நிதானத்துடன், பக்தியுடன் இருங்கள்.

**கேள்வி:** பலர் ''என் கடவுள்தான் உண்மையான கடவுள். உங்கள் கடவுள் அல்ல'' என்கிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**ஸ்ரீஸ்ரீ:** மக்களுக்குக் கடவுளைப் பற்றிச் சரியான கருத்து இல்லாததால் அல்லது அறிவின் குறைபாட்டினால் 'எங்கள் மதம்' உங்கள் மதம்' 'எங்கள் கடவுள்' 'உங்கள் கடவுள்' எனச் சொல்வதாக நினைக்கிறேன். ஒருவர் நல்லனவற்றையெல்லாம் எந்த மதத்திலிருந்து- எந்தப் பின்னணிலிருந்து - வருகிறது. என்று பார்க்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன் உண்மைகளை அறிய ஆர்வம் காட்டவேண்டும். அறிவியல் என்றால் 'அங்கே என்ன இருக்கிறது?' என அறிந்துகொள்வது. ஆன்மீகம் என்றால் 'நான் யார்?' என அறிந்து கொள்வது. இதை ஒவ்வொருவரும் தனக்குத் தானே தான் அறியவேண்டும். இதற்குப் புனிதநூல்கள் உதவும். அவை அதற்குத் தடையாக இருத்தல் கூடாது. இதற்கு ஈடானது வேறெதுவுமில்லை.

**கேள்வி:** கடவுளின் பெயரால் போரிடுவது சரி என நினைக்கிறீர்களா?

**ஸ்ரீஸ்ரீ:** இன்றைய உலகில், கடவுளின் பெயரால் போரிடுவது மிகவும் துரதிருஷ்டமானது, இது முற்றிலும் கடவுள் தன்மைக்கு மாறானது. ஆன்மீகத்திற்கு முற்றிலும் எதிரானது. விசாலமாக நோக்கினால் இத்தகைய பிரச்சினைகளை நீக்கமுடியும். மற்ற கலாசாரங்கள், மற்றமதங்கள் பற்றிய கல்வியறிவு தான், தங்கள் பாதை ஒன்றே கடவுளை அடையும் பாதை என்ற எண்ணத்தை மாற்றும்.

**கேள்வி:** தீவிரவாதிகள் கடவுளின் பெயரால் போரிடுவது பற்றி தங்கள் கருத்து என்ன?

**ஸ்ரீஸ்ரீ:** இத்தகைய போரிற்குக் காரணம் விவேகமில்லாத தன்மைதான் என நினைக்கிறேன். போர் என்பது **War-Worst ACT of Reason.** விவேகத்தினால் மிகமோசமான செயலையும் தவிர்க்கமுடியும். நாம் உலக மக்கள் எல்லோரும் விவேகமுடையவர்களாகும்படி வழிவகுத்தால், சண்டை சச்சரவுகள் குறையும், இசை, தொழில்நுட்பம் முதலியவை உலகின் எந்தப் பகுதியிலிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், ஞானம் அல்லது ஆன்மீகம் எனும் போது, குறுகிய நோக்குடையவர்களாக, 'என்கடவுள், உன் கடவுள், 'என்மதம்', 'உன் மதம்' என்கிறோம். இத்தகைய தடைகளை உடைத்தெறிந்து, மக்கள் அனைவரும் ஒன்றானால் வாழ்க்கை கொண்டாட்டமாக மாறும். கடவுளும் தங்கள் குழந்தைகள் சண்டையில்லாமல் வாழ்வதைப் பார்த்து மகிழ்ச்சி கொள்வார். ☀(54)

# சமூகத்துடன் நெருங்கிய ஊடாட்டம் கொண்டவர் முனைவர் சிவலிங்கராஜா

பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் பலராலும் நன்கறியப்பட்ட சிறந்த கல்விமான். ஆழமான தமிழ்ப் புலமையும் சிறந்த நிர்வாகத்திறனும் எல்லோருடனும் சுமுகமான உறவுகளை வைத்திருக்கும் பண்பும் இவரிடம் ஒருங்கே வாய்க்கப் பெற்றுள்ளன. தனது தளராத முயற்சியினால் தமிழ்த் துறையின் விரிவுரையாளராக - தலைவராக - இன்று பேராசியரியராக உயர்வு கண்டுள்ளார்.



பேராசிரியர் மிக லாவகமாக விரிவுரையாற்றுவார். மாணவர்களுக்கு சுவையாகவும் நகைச்சுவை பொருந்தவும் விரிவுரைகள் ஆற்றுவதும் அவருக்கு கைவந்தகலை. மாணவர்கள் நேரங்கழிவது தெரியாது அவர் விரிவுரையை ரசித்திருப்பர். ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட அக்கறை பேராசிரியருக்குண்டு.

மாணவர் சமுதாயமும் மற்றையோர்களும் படித்துப் பயன்பெறும் பொருட்டு பல நூல்களையும் பல கட்டுரைகளையும் பேராசிரியர் எழுதியுள்ளார். 'வடமராட்சிக் கல்விப் பாரம்பரியம்', 'வித்துவ சிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்', '19ஆம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம்', 'ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி', 'யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள்', 'ஈழத்துத் தமிழ்உரை மரபு' எனும் நூல்கள் அவரது பரந்த அறிவுக்கும் அனுபவத்திற்கும் சிறந்த சான்றுகளாகும்.

பேராசிரியருக்கு ஈழத்திலக்கியங்களில் மிகுந்த 'தாடனம்' உண்டு. ஈழத்தமிழரின் தனித்துவமான இலக்கிய வரலாற்றையும் அவர்களது பண்பாட்டையும் துருவித் துருவி ஆராய்ந்துள்ளார். ஈழத்தமிழர் இலக்கியம் தொடர்பாக இதுவரைகாலமும் வெளிவராத புதிய தகவல்கள் பல இவரது ஆய்வுகள் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளன. 'சொல்லினால் ஒரு மாளிகை' என்னும் பேராசிரியரின் கவிதை நூல் அவரின் ஆக்க இலக்கியத்திறனுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மரபிலக்கியங்களிலும் நவீன இலக்கியங்களிலும் கூட பேராசிரியருக்கு நல்ல புலமை உண்டு. பண்டிதர் க.வீரகத்தி அவர்களிடம் மரபிலக்கியங்களில் பெற்ற ஆழமான அறிவும் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களிடம் பெற்றுக்கொண்ட சமூகவிஞ்ஞானப் பார்வையும் அவரை நன்கு புடம் போட்டுள்ளன. சங்க இலக்கியங்கள், கம்பராமாயணம், கந்தபுராணம், பாரதிபாடல் முதலான இலக்கியங்களை எழுத்தெண்ணிப் படித்தவர் பேராசிரியர். விரிவுரைகளின் போதும் சொற்பொழிவுகளின் போதும் அவரது மரபிலக்கியப் புலமை சரளமாகப் புலப்பட்டு நிற்கும்.

ஈ.குமரன்,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை.

சிறந்த நிர்வாகியாகவும் பேராசிரியர் தன்னை இனங்காட்டியுள்ளார். பல ஆண்டுகளாகத் தமிழ்த்துறையின் தலைவராகக் கடமையாற்றி அத்துறையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகின்றார். தனது துறை விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் என்போரிடம் அவர் காட்டிவரும் அன்பு, அவர்களது வளர்ச்சியில் காட்டிவரும் அக்கறை அவர்களது நலன்கருதி அவர் முன்னெடுக்கும் [illegible] கவனத்திற்குரியன.

சமூகத்துடன் மிகநெருங்கிய ஊடாட்டம் கொண்டவராகப் பேராசிரியர் இருக்கின்றார். கலை விழாக்கள், சமய விழாக்கள், புராண படனம், புத்தக வெளியீடு முதலிய நிகழ்வுகளில் பேராசிரியரை அடிக்கடி சந்திக்க முடியும். இனிமையாகப் பேசும் தன்மை, சிரித்தமுகம் மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கு ஆகியவற்றினால் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார் பேராசிரியர்.

இவ்வாண்டு அறுபதாவது அகவை காணும் பேராசிரியரின் தமிழ்ப்பணி மேலும் சிறக்கவும் அவர் என்றும் நலத்துடன் வாழவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (26)

## சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுப்பாட்டுக்குள் வரணிமக்கள் மகிழ்ச்சி

தென்மராட்சி, ஏப். 7

வரணிப் பிரதேசத்தில் பரவலாக இடம் பெற்றுவந்த சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சட்டவிரோத மணல் அகழ்வினால் பாதிக்கப்பட்ட மக்கள் கலாசாரம் பேணும் குழுவிடம் செய்த முறைப்பாட்டை அடுத்து இந்த நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

குறிப்பாக இடைக்குறிச்சி கிழக்கு, கரம்பைக்குறிச்சி, நாவற்காடு, குடமியன் பகுதிகளில் இடம்பெற்றுவந்த சட்டவிரோத மணல் அகழ்வு ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

(எ-122)(26)



உ[illegible]சுவில் ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற 108 கலச அபிஷேக ஸ்கந்தஹோமப் பெரு விழாவில் எடுக்கப்பட்ட படம் இது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய்குருதேவ்

**ஆன்மீக வாழ்வின் குருவே**
**யாழ்.மண்ணிற்கு வருக! வருக!**



அபிநயா மலர் எலக்ரோனிக்,
(MPL விநியோகத்தர்கள்),
யாழ்.வீதி, மானிப்பாய்.

(49053)(32-11-15)



# தேவை

எமது புத்தகசாலைக்கு கணக்காளர் **Bill Clerk** (பெண்கள்) தேவை. விரும்புவோர் தமது சுயவிவரக்கோவையுடன் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். (சி/48696)(32-15-11)

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.





ஜெய்குருதேவ்

**உலக சமாதான குருவே!**
உங்களை வருக வருக என அன்பே ) வரவேற்கின்றோம்.

பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/நவாலி மகா வித்தியாலயம்,

(49027)(32-11-15)





ஜெய்குருதேவ்

**வாழும் கலைக்கு புத்துயிர் தந்த மகானே வருக! வருக!**

அனுசரணை: துர்க்கா அழகுமாடம்,
227, மானிப்பாய் வீதி
(வைத்தீஸ்வராச் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்

(49051)(32-11-15)



ஜெய்குருதேவ்

"சுதர்சனக் கிரியா" என்னும்
உயிர் கலை தந்த குருவே!
வருக வருக!!



திரு.திருமதி யோகநாதன் (இளவாலை).
செல்வி க.ரவிசாந்தி (மானிப்பாய்).

(49052)(32-15-11)


## யாழ்.கல்வியியற் கல்லூரியின் மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வீரசிங்கியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் இசுருபாய 'ஏ' பிரிவின் பிரதம ஆணையாளர் திருமதி கே.எம்.தர்மலதாவும் சிறப்பு விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பணிப்பாளர் வை.ஏ.என்.டி.யாபாவும் கலந்துகொள்வர்.

(த-202)(23)


# தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (09.04.2006) காலை 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ம.விக்னேஸ்வரன்,
செயலாளர்.

(49061)(32-15-11)



# பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 10 - 05 - 1974



இறப்பு 07 - 04 - 1994

**சிவானந்தராஜா தயானந்தன்**
(தயா, தமிழீழக் காவல்துறை)

மின்னலாய் வந்தாய் மழையாய் பொழிவாய்
என்று ஆனந்தமடைகையில் இடியென
காலன் உனை எம்மிடமிருந்து பிரித்துச்
சென்றதை விதி என்பதா? சதி என்பதா
நீ எமைப் பிரிந்து பன்னிரண்டு ஆண்டுகள்
கழிந்தாலும் உன் நினைவு எம் விழிகளில்
கண்ணீர் சொட்ட வைக்குதடா.

குடும்பத்தினர்.

நி.முகவரி:
வீரபத்திரர் கோயில் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

த.முகவரி:
G.P.S றோட்,
3ஆம் கட்டை, கல்வியங்காடு.

(48050)(32-11-15)


## கொடிகாமத்திலிருந்து மேலும் ஒரு மினிபஸ் சேவை

தென்மராட்சி, ஏப்.7

தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் கொடிகாமத்திலிருந்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு மேலும் ஒரு மினிபஸ் சேவையினை எதிர்வரும் பத்தாம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளனர்.

முற்பகல் 10.30 மணிக்கு கொடிகாமத்திலிருந்து புறப்படும் மினிபஸ் மீசாலை, புத்தூர் சந்தி, கனகன் புளியடிச் சந்தி, மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில், மட்டுவில் தெற்கு, கைதடி நுணாவில் வைரவர் கோயில் ஊடாக யாழ்ப்பாணம் சென்றடையும்.


இதே பஸ் பி.ப.4.45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு இதே மார்க்கமாக கொடிகாமம் சென்றடையுமென்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே தினமும் காலை 7.30 மணிக்கு கொடிகாமத்திலிருந்து இந்த மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்கு மினிபஸ் சேவை நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

(த- 117)(23)


# 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அவனியில் 22 - 11 - 1943



அவனடியில் 07 - 04 - 1989

அமரர்
**கனகரட்ணம் பரராஜசிங்கம் (S.L.A.S)**
(முன்னாள் உதவி அரச அதிபர், குச்சவெளி)
திதி: 31.03.2006

அகிலத்தை விட்டோடி
ஆண்டுகள் 17 ஆனபோதும்
ஆறவில்லை எம் இதயங்களின் வேதனை
எமக்கு மட்டும் சொந்தம்
உங்கள் நினைவுகள் தரும் துயரம்
என்றும் உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை உங்களை மறவோம்.

15, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(49062)(22-32-15-11)



# COOL AIR'S
## GALANZ AIR CONDITIONERS (SPILT TYPE)

- தொலைத்தொடர்பு நிலையங்கள்
- வர்த்தக நிலையங்கள்
- கணனி நிறுவனங்கள்
- காட்சி அறைகள்
- வீடுகள்

**இவைகளுக்கேற்ற குளிரூட்டிகள்**

**எமது சேவைகள்**

- பொருத்துதல் இலவசம்
- ஐந்து வருட உத்தரவாதம் (Compressor 5 years, body 1 year)
- விற்பனைக்குப் பிந்திய சேவை
- மூன்று மாதத்திற்கு ஒருமுறை தொழில்நுட்பவியலாளர்களால் குளிரூட்டிகள் பரிசீலனை செய்யப்படும்.

**ISO 9001 தரச்சான்றிதழ் பெறப்பட்டது.**

| வ.கு | | விலை |
|---|---|---|
| 9000 | BTU | 43,500/= |
| 12000 | BTU | 53,500/= |
| 18000 | BTU | 65,500/= |
| 24000 | BTU | 85,500/= |

மேலதிக விவரங்களுக்கு:
**COOL AIR'S**
இல.151 1/4, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

0777 738888, 0713 080808

(48987)(32-11215)


## மர, உலோக வேலையாளர்கள் விவரம் பதிவு

யாழ்ப்பாணம்,ஏப்.7

மர, உலோக உற்பத்தியாளர் சங்கம் யாழ்.மாவட்டத்தில் மர, உலோக வேலைகளில் ஈடுபடுபவர்களைப் பதிவுசெய்து வருகின்றது. எனவே மாவட்டத்தில் மர, உலோக வேலைகளில் ஈடுபடுபவர்கள் தமது விவரங்களை சங்கத்தில் பதிவுசெய்து ஒப்பந்த வேலைகளைச் சங்கத்தின் அனுமதியுடன் மேற்கொள்ளுமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

நடைமுறையை மீறி ஒப்பந்த வேலைகளைச் செய்வோர் மீது நிர்வாக ஒழுங்குக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு - கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

(ஐ-202)(32)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 08 - 03 - 1940



மறைவு 08 - 03 - 2006

**சிதம்பரி தங்கவேல்**
(இளைப்பாறிய அதிபர், யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)

காலத்தின் ஓட்டங்கள் கவலையைத் தீர்த்திடுமா?
பாசத்தின் கோலத்தை நாள்கடந்தும் ஆற்றிடுமா?
ஆழத்தில் புதைத்த அன்புமனம் நீங்காது
தேசத்தில் நாங்கள் வாழுமட்டும் உமை மறவோம்.

அமரரின் இல்லத்தில் இன்று (07.04.2006) வெள்ளிக்கிழமை இடம்பெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

நாவற்காடு,
அச்சுவேலி. (48986)(32-15-11)

குடும்பத்தினர்.



# மாவட்ட மட்டக் கண்காட்சியும் விற்பனையும் - 2006 (09.04.2006, 10.04.2006)

வடக்கு - கிழக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மகளிர் அபிவிருத்தி நிலைய உற்பத்திப்பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும்.
இடம்: யாழ்/இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
காலம்: 09.04.2006, 10.04.2006
நேரம்: முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

(49011)(32-11-15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்!

கோப்பாய், ஏப்.7

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் மின்சாரம் தாக்கி 18 வயது இளைஞர் ஒருவர் பலியானார். வைபவம் ஒன்றிற்காகக் கடந்த செவ்வாய்க்கிழமை மின் இணைப்பு மேற்கொண்டவேளையிலேயே இவர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானார் என்று கூறப்படுகிறது.

(ஒ-72)(16)

# புனித சாள்ஸ் பாடசாலையில் சிறுவர் பூங்கா திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டியும், சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் எம்.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில் சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் கல்வித்திட்ட முகாமையாளர் கலாநிதி ஏ.பேரின்பநாதன் கலந்துகொள்வார்.

(ஒ)(18)

# சிறுதானியச் செய்கை

வரணி இடைக்குறிச்சி மாவில் வயல் வெளிப் பிரதேசத்தில் சிறு தானியப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் பலர் இப்பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இப்பகுதியில் கால்நடைகளைக் கட்டுப்படுத்தி ஒத்துழைக்குமாறு கால்நடை வளர்ப்பவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(ஒ-122)(18)


## வேலையாள்கள் தேவை

உணவகத்திற்கு ரொட்டி மேக்கர், ரீ மேக்கர், சப்ளையர்கள், சமையலாளர்கள் உடன் தேவை. தங்குமிட வசதிகள் உண்டு. தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

**லிங்கம் கபே**
பெற்றோல் செற் அருகே
கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-48740)
(18-16-49)

அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர் / ஆவண உதவியாளர் } வகுப்புகள்

**D.M.I. யாழ்நகர்**

சனி 12.30 - 2.30, ஞாயிறு 1.00 - 3.30
* சனி வகுப்பு நடைபெறமாட்டாது (08.04.2006), ஞாயிறு நடைபெறும்.


## MINISTRY OF CONSTITUTIONAL AFFAIRS & NATIONAL INTEGRATION

A Seminar on
**" Emerging Trends of Crime"**

- ☐ Cyher Crime
- ☐ Intellectual Propaty offence
- ☐ Computer Evidence

**By: Mr. Kalinga N.Indatissa**
(Attorney - at - Law)

Date : 08.04.2006
Time : 9.00 a.m. - 12.30 p.m.
Uenue : The Auditorium
Public Library, Jaffna.

(a joint venture of equal Access to justice project and the Department of Law, University of Jaffna)

**UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை
அதிபர் ந.இராசதுரை அவர்களின்
அன்புத் தாய்

**நல்லதம்பி சிவக்கொழுந்து**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(49080)
(18-16-49)

பாடசாலைச் சமூகம்,
யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.


## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், பிராஜ்ஸ்மின், கருணாஸ் நடித்த
**மெர்க்குரிப் பூக்கள்**
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.30, 6.30, 9.00, (பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த் நடித்த
**சுதேசி**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

பரத், சந்தியா
நடித்த
**காதல்**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி உயிரியல் ஆசிரியை
திருமதி ட.செ. அரசரெட்ணம் அவர்களின்
அன்புத் தந்தை

**தம்பு செல்வராஜா**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(49091)
(18-16-49)

ஆசிரியர் கழகம்,
யாழ். இந்துக் கல்லூரி.

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர் சீ.இலகுமீகரன்
அவர்களின் அன்புத் தந்தை

**சின்னத்துரை சீவரத்தினம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு மனம் வருந்துகிறோம். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-48737)
(18-16-49)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்.

## FORUT

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான 90 வீடுகளைக் கட்டுவதற்கான

### கேள்வி அறிவித்தல்

1. போரூட் நோர்வே / சுவீடன் நிதியுதவியுடன் சர்வதேச நல்லொழுக்கங்களின் அடிப்படையில் சாந்தி, சமாதானம், ஜனநாயகம் என்பவற்றை கொள்கையாகக் கொண்டு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுகின்ற ஒரு நிறுவனம்.
2. சுனாமி வேலைத் திட்டங்களில் ஒன்றாக போரூட் நிறுவனம் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள தீர்த்தக்கரை வடக்கு கிராமத்தில் 90 நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கவுள்ளது. இதற்காக பொறிவைக்கப்பட்ட கேள்விகள் போரூட் நிறுவனத்தினால் கோரப்படுகின்றது.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர் மேலதிக விவரங்களை கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**அலுவலக முகவரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

- *போரூட் கொழும்பு, 98/4, ஹவ்லக் றோட், கொழும்பு -05.*
- *போரூட் வவுனியா, 88, 3ஆவது ஒழுங்கை, சிந்தாமணி பிள்ளையார் கோயில் முன்பாக, வவுனியா.*
- *போரூட் பிராந்திய காரியாலயம், 151 மைல் கட்டை, A 9 வீதி, கிளிநொச்சி.*
- *போரூட் யாழ்ப்பாணம், 52, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*

கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட முகவரிகளில் இம்மாதம் 7 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதிவரை அலுவலக நேரங்களில் (9.00 - 4.00) பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி கோருவோர் குறைந்தது M7 ICTAD பதிவு உடையவராய் இருத்தல் வேண்டும்.

விவரங்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்- 0112581226, 0112587252, 0773623506

4.அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு முகவரிக்கு திட்ட முகாமையாளர், வன்னி என்று விலாசமிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும். இம்மாதம் 26 திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணியுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நேரம் முடிவடையும்.

கேள்விகள் யாவும் இம்மாதம் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு போரூட் வன்னி பிராந்திய அலுவலகத்தில் திறக்கப்படும்.

பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் யாவும் அலுவலர்கள், கேள்விதாரர்கள்/ பிரதிநிதிகள் போன்றவர்களின் முன்னால் மேற்குறிப்பிட்ட நேரம், திகதியில் வன்னி பிரா்ந்திய காரியாலயத்தில் திறக்கப்படும்.

திட்டமுகாமையாளர்,
வன்னிபிராந்திய காரியாலயம்,
155 மைல் கட்டை, A 9 வீதி,
கிளிநொச்சி.

(சி-48738)
(18-16-49)

# புற்றுநோயாளருக்கு உதவிக்கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, ஏப்.7

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட வலி.மேற்குப் பிரிவுக்கிளை இப்பிரிவிலுள்ள புற்றுநோயாளர்களுக்கு மாதாந்தம் உதவிக் கொடுப்பனவை வழங்கத் தீர்மானித்துள்ளது. இதற்காக இப் பிரிவிலுள்ள புற்றுநோயாளர்களின் விவரம் தற்போது திரட்டப்பட்டு வருவதாக வலி.மேற்குப் பிரிவுக்கிளையின் தலைவர்தி. உதயசூரியன் தெரிவித்தார்.

(ஒ-135)(18)

# வீதி புனரமைப்பு

தென்மராட்சி, ஏப்.7

உசன் - விடத்தற்பளை வீதி, வீதி அதிகார சபையினரால் புனரமைக்கப்பட்டு வருகிறது. பல வருடங்களாகப் புனரமைக்கப்படாது குண்டும் குழியுமான நிலையில் இருந்த இவ்வீதியை புனரமைக்கும்படி விடத்தற்பளை மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதனையடுத்து இவ்வீதியை புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஒ-122)(16)

## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி பத்மநாதன் (பத்தர்)

அல்வாய், மாலு சந்தியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி பத்மநாதன் அவர்கள் நேற்று(06.04.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கன்னாதிட்டி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.:0776943809*

(49089)
(18-16-49)

தகவல்:
ப.நித்தியானந்தன்
(மகன்).

### திருமதி நல்லதம்பி சிவக்கொழுந்து



புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி நல்லதம்பி சிவக்கொழுந்து நேற்று (06.04.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலங்கையர் - பொன்னுமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நல்லதம்பியின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் அன்னலெட்சுமி (இரத்தினம் - கிளிநொச்சி) காலஞ்சென்ற யோகலட்சுமி (தவமணி), இராசதுரை (அதிபர், யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்) ஏரம்பமூர்த்தி (சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயும் கோபாலபிள்ளை (கிளிநொச்சி), செல்லத்துரை (கொழும்பு), தர்மலோசினி (சித்தி), புஸ்பவதி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியும் சிவதர்சினி (யசோ - கனடா), சுபதர்சனி (சுபா - கொழும்பு), பிரியதர்சினி (றமா - கொழும்பு), சிவதர்சன் (வசந்தன் - யாழ்ப்பாணம்), யசோதினி (சோபிகா - உபதபாலதிபர், ஊரதீவு), கிந்துஜா (கொழும்பு), வசிதரன் (மகாசக்தி பெஷன், யாழ்ப்பாணம்), கோபினா (மாணவி, யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), திருச்செந்தீசன் (செந்தில்), நிஜே (கொழும்பு), செந்தில் மாறன் (மாறன்), சோபனா (லக்கி), கோபிகா(சுகி), (மாணவிகள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகேதன், ஜெனிதன், அட்ஷயா, அபிநேயா, அனுஷ், அபிஷேக் ஆகியோரின் அன்புப் பூட்டியும் சிதம்பரப்பிள்ளை (இந்தியா), யோகாம்பிகை (ஓய்வுபெற்ற அதிபர், அப்புத்தளை), தண்டாயுதபாணி (கிராமசேவையாளர், வட்டக்கச்சி), தர்மபாலன் (கிளிநொச்சி), தர்மாம்பிகை (லண்டன்), அகிலேஸ்வரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சித்தியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சதாசிவம், இலட்சுமி, விசாலாட்சி, மீனாட்சி, முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேரதீவு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(49075)
(18-16-49)

தகவல்:
ந.இராசதுரை
(மகன் - அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான செயலகத்துக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

கொழும்பு,ஏப். 7

அரச சமாதான செயலகத்தின் புதிய பணிப்பாளராக பாலித கொஹோன்னஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதத்தை கொஹோன்ன நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடமிருந்து பெற்றுக் கொண்டார். சமாதான செயலகத்தின் பதில் பணிப்பாளராக இதுவரை காலம் கடமையாற்றிய ஜோன் குணரட்ன பிரதிப் பணிப்பாளராக் கடமையாற்றுவாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான செயலகத்தின் புதிய பணிப்பாளரானபாலித கொஹோன்ன ஜெனீவாவில் இறுதியாக நடைபெற்ற அமைதிப் பேச்சுகளில் அரசசார்பு பிரதிநிதியாக கலந்துகொண்டிருந்தார். இவர் வெளிநாடுகள் பலவற்றில் உயர் பதவிகளை வகித்து வந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (க)

# வணிகர் சங்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரும் தளபதிகளும் - தாம் செய்த கொடுமைகளை தமிழ் மக்கள் மறந்துவிட்டதாக எண்ணி பகல் கனவு காண்கின்றனர். கடந்த மூன்று மாதகால இடைவெளிக்குள் சிங்களப் படைகள் நடத்திய ஆழிக்கூத்தினால் அறுபது தமிழ் இளைஞர்கள் கைதாகி காணாமற் போயுள்ளனர். ஐம்பதிற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் உயிர்கள் ஆக்கிரமிப்புப் படைகளால் பறிக்கப்பட்டன. சுற்றிவளைப்புகள் தேடுதல்கள் தாக்குதல்கள் தொடர்கின்றன. இவற்றை தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டும் ஒன்பது பொதுமக்களின் உயிர்கள் படையினரின் துப்பாக்கி வேட்டுக்களால் பலியெ டுக்கப் பட்டதை இவ்வளவு குறுகிய காலத்தில் மக்கள் மறந்திருப்பார்கள் என படைத்தரப்பு நம்புவது ஏமாற்றமே. இந்த நிலையில் அழிவின் பாதைக்குள் நிற்கும் சிங்கள ஆக்கிரமிப்பு படைகள் நடத்தும் எந்த வித விளையாட்டிலோ, நிகழ்ச்சிகளிலோ உங்கள் பிள்ளைகளைப் பங்குகொள்ள அனுமதிக்க வேண்டாம் என்றும் நாம் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

விளையாட்டுக்கழகங்கள், பாடசாலை சமூகங்கள், முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் எவையும் இவ் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றுவதைத் தவிர்க்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இந்தப் போட்டிகளில் இடம்பெறும் அசௌகரியங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

-பொங்கியெழும் மக்கள் படை,
யாழ்.மாவட்டம்.

இவ்வாறு அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (25)


ஆர்.பி.பஸ் ஆசனப்பதிவகம்

யாழ். - கொழும்புக்கான குளிரூட்டப்பட்ட

சொகுசு பஸ் சேவை



சொகுசு பஸ் ஆசனப்பதிவு தொடர்புகளுக்கு:
R.B. ஆசனப்பதிவகம்,
நவீன சந்தை அருகில்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(49086)
(18-12-49)

T.P.: 021 222 7016 , 021 222 8356


# வன்னியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்கு உரிய பயணப் பாதுகாப்பு உத்தரவாதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கமுடியாமல் போனால்.

அடுத்தது-அத்தகைய சூழ்நிலையில் இரணைமடுவிலிருந்து மாலேக்கான விமானப் போக்குவரத்து ஒழுங்குகளை அனுசரணைத் தரப்பான நோர்வேயால் வழங்க முடியாமல் போனால்.

இந்த நிலைமைகள் ஏற்பட்டால் புலிகள் தமது சொந்த விமானத் தில் புறப்படுவர்.

புலிகள் தங்களின் சொந்த விமான அணியை உருவாக்கியுள்ள தோடு இருபதுக் கும் அதிகமான சிறியரக விமானங்களையும் கடல் விமானங்களையும் வைத்திருக்கின்றனர் என அறியப்படுகிறது. இத்தகைய கடல் விமான மார்க்கம் வழியாக 2002 இல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் வன்னி வந்தனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் 'யதார்த்தவாதி' என வர்ணிக்கப் பட்ட மஹிந்த ராஜபக்ஷ, சொல்லிலும், செயலிலும் வழங்கும்படி புலிகள் கோரிய பயணப்பாதுகாப்பு உத்தரவாதத்தை ஜெனீவாப் பேச்சின் அரசியல் முக்கியத்துவம் கருதி வழங்குவதற்கு இணங்குவார் என்றே எதிர் பார்க்கப்படுகிறது. அதைச் செய்யாது அவர் தவறுவாராயிருந்தால் அதன் அரசியல் விளைவுகள் விபரீதமானவையாக இருக்கும்.

முதலில் ஜெனீவாப் பேச்சுகள் மோசமாகப் பாதிக்கப்படும். அடுத்து - கட்டுநாயக்காவைத் தவிர்த்து, இரணைமடுவிலிருந்து மாலேக்கு ஒஸ்லோ ஏற்பாடு செய்த விமா னத்திலோ அல்லது சொந்த விமானத்திலோ புலிகள் பயணிப்பது புலிகளுக்கு மிகப்பிரமாண்டமான பிரசார 'வாய்ப்பாகும்.

விடுதலைப்புலிகள் தமது சொந்த விமானத்தில் அவ்வாறு பறப்பார்களேயானால் அது அரசியல் ரீதியாகவும், இராணுவரீதியாகவும் அவர்களுக்கு பாரிய வெற்றியா கும். மேலும் அவ்வாறு இரணைமடுக்குளத்தில் மட்டுமல்லாது வடக்கு- கிழக்கில் தாம் அமைத்துள்ள மூன்று விமான ஓடு தளங்களில் ஏதா வது ஒன்றிலிருந்து விமானப்பயணத்தை ஆரம்பிப்பதன்மூலம் புலிகள் தமிழர்களைக் கவர்ந்து, உலகைஅதிர்ச்சியில் மூழ்கவைத்து, சிங்களவர்களையும் கொதிப்புக்குள் ஆழ்த்தி விடுவர்.-இப்படி அவர் தெரிவித்திருக்கின்றார். (க)

# சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொஹோன்ன, இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அமைதிப் பேச்சுகளுக்குச் செல்லும் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கான பாது காப்பு ஏற்பாடுகள், ஜெனீவாப் பேச்சில் உடன்பாடு காணப்பட்ட விடயங்களின் அமு லாக்கம் என்பன குறித்தே நேற்றைய இந்தப் பேச்சுவார்த்தையின்போது விரிவாக ஆரா யப்பட்டிருக்கிறது.

ஒரு வாரத்திற்கு முன்னர் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோச கர் அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுகள் குறித்து எரிக் சொல்ஹெய்மும், நேற்று முன்தினம் கிளிநொச்சியில் விடு தலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் தாம் நடத்திய பேச்சுகள் குறித்து ஹன்ஸன் போவரும் நேற்று ஜனாதிபதியிடம் விரிவாக எடுத் துக் கூறியிருக்கின்றனர்.

எரிக் சொல்ஹெய்மும், போவரும் இன்று புதுடில்லியில் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகளை சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பு முடிந்து நோர்வே செல்லும் வழியில் அவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்ட னில் சந்திக்க வுள் ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)


மாபெரும் கருத்தரங்கு
A/L தமிழ் BEACON

ஆரம்பம் 10.04.2006 திங்கள்
9.00 - 12.00

வழிகாட்டல்
I. தமிழ் வழி ஆசிரியர்
II. வெற்றிவழி ஆசிரியர்

Note:
★ முற்பதிவு அவசியம்
★ கருத்தரங்குக் கையேடு
★ திருவடிசூட்டுபடலம் செய்யுட்கோவை வினா விடைத் தொகுப்பு உட்பட 9 வெளியீடுகள் கிடைக்கும்.

BEACON யாழ்ப்பாணம்.

நாக. தமிழிந்திரனின் 2008 புதிய பிரிவு
10.04.2006 திங்கள் 8.00 - 9.00



2008 A/L
பொறியியல்
Sat.,Sun.
5.00 - 6.00 p.m.
(S.L.T.)
BY:
M.KARUNANITHY
ஆரம்பம்:
08.04.2006


# அதிபர்களுக்கு கருத்தரங்கு

அச்சுவேலி, ஏப்.7

அதிபர் சேவைத் தரப்பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்றுமுதல் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம், புதுக்குடியி ருப்பு மகா வித்தியாலயம், மாங்குளம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஏக காலத்தில் இடம்பெறும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. (ஒ-11) (18)

# ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைப் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட சுவிஸ் இராஜதந்திரிகள், அதிகாரிகள் போன்றோரும் -

இரண்டாவது மாடியில் இலங்கை அரசுக் குழுப் பிரதிநிதிகளும் -

தங்க வைக்கப்படுவார்கள் எனத் தெரிய வருகின்றது.

கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற முதல் சுற்றுப்பேச்சுகள் ஜெனீவா நகருக்கு வெளியில் சாட்டோ டி பொய்ஸி அரண்மனையில் நடைபெற்றதும்-

ஒதுக்குப்புறமான அந்த இடத்தில் வழங்கப்பட்ட வசதிகள், ஏற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளால் அதிருப்தி தெரிவிக்கப்பட்டதும் - தெரிந்தவையே.

இதன் காரணமாக எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அடுத்த சுற்றுப் பேச்சை அரசு, புலிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இணக்கமான- விருப்பமான- இடத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள ஹோட்டலில் இந்தத் தடவை பேச்சை நடத்துவது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்தை அறியும் நடவடிக்கைகளை சுவிஸ் அதிகாரிகள் மேற்கொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரியாகக் கருதப்படும் நியோனில் ரம்மியமான சூழலில் மேற்படி ஹோட்டல் அமைந்துள்ளது. அதில் உள்ள விசாலமான மண்டப கூடத்தில் பேச்சுகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. (க)

# திருநெல்வேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில் இருந்தவர்கள் கதவைத் திறக்காது அவலக் குரல் எழுப்பினர்.

இதனால் ஆத்திரமடைந்த கொள்ளையர்கள் ஜன்னல்களை உடைத்ததுடன் அங்கிருந்த வாகனங்களை சேதமாக்கிவிட்டுச் சென்றனர்.

கொள்ளையர்களில் சிலர் வீடுகளுக்குள் நுழைந்து கொள்ளையடிக்க மற்றவர்கள் வீட்டைச் சுற்றி நின்று அயலவர்கள் உதவிக்கு வராதபடி ஆயுதங்களைக் காட்டி மிரட்டிக் கொண்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது. இச் சம்பவங்கள் தொடர்பாக பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.



கணக்கீடு
திரு. பாலவாசன்
B.B.A. (FM. Spl.)
A/L 2007
நிறைவில் பதிவு
Sat., Sun. 8.00 -9.00
ஆரம்பம்:
08.04.2006
8.00 a.m.
விக்னா
கல்வி நிறுவனம்



மாபெரும்
யாழ். வர்த்தக கண்காட்சி -2006
பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுங்கள்!
காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை
இடம்: யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
DREAM SOLUTIONS (PVT) LTD
275, JAFFNA ROAD, MANIPAY



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவ[illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும்

வெளியீடு 08


# புலமைப்பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்


திரு. வே. அன்பழகன் - யாழ்ப்பாணம்.

❖ சரியான இலக்கத்தின் கீழ்க் கோடிடுக.

01. "மயக்கம்" எனும் சொல்லை □○⊡△▭ எனும் குறிமீட்டால் எழுத முடியும். எனின் "பழக்கம்" எனும் சொல்லுக்குரிய குறிமீட்டை எழுதியிருக்கக் கூடிய விடையைத் தெரிந்து கோடிடுக.




02. "கலக்கம்" எனும் செல்லுக்குரிய சரியான குறிமீடுகளைமிட்டு எழுதியுள்ள விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்



❖ கீழே ஒவ்வொரு வினாக்களில் தரப்பட்டுள்ள மூன்று சொற்களும் மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருவை தரப்பட்டுள்ள உருக்களில் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

03. அமிழும்
கறைபிடிக்கும்
குத்தும் (ஏறும்)

04. மிதக்கும்
உருளும்
அமுங்கும்



❖ மிகவும் சரியான கருத்துள்ள வாக்கியத்தின் கீழ்க்கோடிடுங்கள்.

05. 1. காகமொன்று பசிபிடித்து கடையொன்றில் வடையொன்றைத் திருடியது.
2. காகமொன்று கடையொன்றினால் பசிபிடித்து வடையொன்றைத் திருடியது.
3. பசிபிடித்த காகமொன்று கடையொன்றில் வடையொன்றைத் திருடியது.

06. 1. எல்லாம் மின்னுவது பொன்னல்ல.
2. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
3. பொன்னல்ல எல்லாம் மின்னுவது.

❖ பின்வரும் வினாக்களில் எழுத்துகள் எழுதப்பட்ட துண்டுகளை ஒழுங்கமைப்பதன் மூலம் வினாக்களுக்கு விடை எழுதுக.


07. ண ழ் யா பா ப் ம்

ஒரு நகரின் பெயரை எழுதுக.................................


08. கை த பு யி ம் ர

ஒரு போக்குவரத்து சாதனம் ஒன்றின் பெயரை எழுதுக......................

❖ முதல் இரு எண்கோலங்களின் தொடர்பை விளங்கிக் கொண்டு மூன்றாவது எண் கோலத்தில் உள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான எண்ணைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

09. 

.................................

10. 


.................................


❖ கீழே தரப்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் போது பெறப்படும் விடையைத் தெரிந்து கீழ்க் கோடிடுக.

11. அமரவிடம் மூன்று வகையான நாணயங்கள் உள்ளன. அவற்றின் மொத்த கூட்டுத் தொகை ரூ. 15 ஆகும். அவரிடமுள்ள நாணய வகைகள் எவை?
1) ரூ. 5 நாணயம் மூன்று ரூ. 2 நாணயம் ஒன்று ரூ. 1 நாணயம் ஒன்று.
2) ரூ. 5 நாணயம் ஒன்று. ரூ. 2 நாணயம் ஐந்து. ரூ. 1 நாணயம் ஒன்று.
3) ரூ. 5 நாணயம் இரண்டு. ரூ. 2 நாணயம் இரண்டு. ரூ. 1 நாணயம் ஒன்று.


12. இந்துக் கல்லூரியில் இருக்கும் ஆண் பிள்ளைகளினதும், பெண் பிள்ளைகளினதும் கூட்டுத் தொகைகளின் வித்தியாசம் 125 ஆகும். அவ்வாறாயின் இந்துக் கல்லூரியில் இருக்கக் கூடிய ஆண், பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையாவது?
1) ஆண்பிள்ளைகள் 300 ஆகும். பெண்பிள்ளைகள் 150 ஆகும்.
2) ஆண்பிள்ளைகள் 400 ஆகும். பெண்பிள்ளைகள் 275 ஆகும்.
3) ஆண்பிள்ளைகள் 500 ஆகும். பெண்பிள்ளைகள் 380 ஆகும்.

❖ கீழே தரப்பட்டுள்ள உருக்களில் இடைவெளிகளுக்குப் பொருத்தமான பகுதியை தரப்பட்டுள்ள உருக்களிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

13. 


14. 

❖ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

15. 


எண்கோல ஒழுங்கில் அமைந்த மரங்களின் வரிசையில் 7 ஆவது மரம் இருக்குமாயின் அந்த மரத்திற்கு இடவேண்டிய எண் யாது?
(1) 61 (2) 68 (3) 75 (4) 82

16. அருகிலுள்ள சதுரக்கூடுகளில் 4 உருக்கள் நிறந்தீட்டப்பட்டுள்ளன அதில் மிகப் பெரிய உருவில் அடங்கும் சதுரங்கள் எத்தனை?
(1) 5 (2) 6 (3) 7 (4) 8



17. கிரிக்கட் விளையாட்டு வீரர்கள் 5 பேர் பெற்ற ஓட்டங்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| ஜெயசூரியா 165 | அன்வர் 170 | பிளமிங் 156 | கங்குலி 157 |

ஆகக் கூடிய ஓட்டங்களைப்பெற்ற வீரனுக்கான பரிசு யாருக்குக் கிடைக்கும்?
(1) அன்வர் (2) ஜெயசூரியா (3) பிளமிங் (4) கங்குலி


❖ ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

18. 
(1) பாடுதல்
(2) பார்த்தல்
(3) நடித்தல்
(4) உரையாடுதல்


19. 
(1) பாடுகிறார்
(2) ஆடுகிறார்
(3) பாய்கிறார்
(4) ஓடுகிறார்


❖ கீழ் உள்ள வினாக்களில் காணப்படும் உருக்களிற்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

20.  1) சீனி 2) நிறை 3) பொருள்


21.  1) நீர் 2) மழை 3) ஆறு

❖ உருக்கள் அமைந்துள்ள கோலத்தை அவதானித்து வெற்றுக் கூட்டுக்குள் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

22. 

23. 

❖ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்கு உரிய எண்ணைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

24. 

......................

25.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 4 | 6 | 9 | 13 | ? |

......................


❖ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள நான்கு உருக்களில் ஒன்று ஏனையவற்றில் இருந்து வித்தியாசமானது. அதனைத் தெரிந்து கீறிடுக.

26. 

27. 

❖ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய படத்தைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

28. பின்வருவனவற்றுள் எது நாளுக்கு நாள் வளர்ச்சி அடையக் கூடியது?



(..........)

29. எரிபொருள் இல்லாது பிரயாணம் செய்யக் கூடிய வாகனம் எது?



(..........)

❖ பின்வரும் சொற்கள் அமைந்துள்ள கோலத்தை அவதானித்து அடுத்து வரவேண்டிய சொல்லைத் தெரிந்து கீறிடுக.

30. பாத்திரம், சாத்திரம், கோத்திரம்,...............
1) நிரந்தரம் 2) காத்திரம் 3) சரித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. விளக்கு, குறிப்பு, புன்னகை, …………..
1) கைக்கூலி 2) கணிதம் 3) நகைப்பு

❖ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள படங்கள் தொடர்பாக வினாவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடையின் கீழ்க் கோடிடுக.**

32.  இங்கு மரம் காணப்படுவது
1) வீட்டின் மீது
2) வீட்டுக்குப் பின்னால்
3) வீட்டுக்கு உள்ளே

33.  இங்கு சூரியன் காணப்படுவது
1) நடுக்கடலில்
2) கடலுக்கு அடியில்
3) அடிவானத்தில்


❖ **பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தந்துள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

34. காலம் படிப்படியாகக் குறைந்து செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள முறை
1) வருடம், மாதம், மணி, நாள், செக்கன்
2) நூற்றாண்டு, ஆண்டு, மாதம், வாரம், நாள்
3) செக்கன், நிமிடம், மணி, நாள், வாரம்
4) வாரம், நாள், மணி, வருடம், நிமிடம்

35. குடும்பத்தில் உள்ளோரின் வயதடிப்படை படிப்படியாக கூடிச் செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள முறை.
1) தங்கை, நான், அண்ணா, அப்பா, பாட்டன்
2) அண்ணா, நான், அப்பா, தங்கை, பாட்டன்
3) பாட்டன், அப்பா, அண்ணா, நான், தம்பி
4) தங்கை, தம்பி, அண்ணா, அப்பா

❖ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

36. பின்வரும் உருவில் நிறந்தீட்டப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்கு?



1) $\frac{3}{5}$ 2) $\frac{3}{6}$ 3) $\frac{3}{8}$ 4) $\frac{3}{7}$


37. ஐந்து விளையாட்டுக்களில் விருப்பமுள்ள பிள்ளைகளின் விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | விளையாட்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | ஓடுதல் | பாய்தல் | எல்லே | கைப்பந்தாட்டம் | சடுகுடு |
| பிள்ளைகள் தொகை | 25 | 38 | 47 | 56 | 30 |

ஐந்து விளையாட்டுக்களிலும் விருப்பமுள்ள பிள்ளைகளின் தொகை யாது?


1) 195 ஆகும் 2) 196 ஆகும் 3) 280 ஆகும் 4)186 ஆகும்.

38. பின்வரும் படத்துக்குப் பொருத்தமான தொகை யாது?




1) 635 2) 553 3) 536 4) 365

39.



மேலே ஒவ்வொருபு,விலும் ஆறு இதழ்கள் உள்ளன. அவற்றில் இரண்டுபு,க் களை தம்பி பழுதாக்கிவிட்டான். எஞ்சிய பூக்களில் எத்தனை இதழ்கள் இருக்கும்?
1) 36 2) 32 3) 30 4) 25

40. கீழே உள்ள பற்றுச் சீட்டின் முழுப் பெறுமதி எவ்வளவு?

| பொருள் | ரூ ச |
|---|---|
| தேயிலை 1kg | 288.50 |
| சீனி 1kg | 32.50 |
| மொத்தம் | |

1) ரூ 322.00 ஆகும் 2) ரூ. 321.00 ஆகும்
3) ரூ. 320.00 ஆகும் 4) ரூ. 310 ஆகும்

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 07

# புலமைப்பரிசில் பரீட்சை

திரு. P . அம்பிகைபாகன் - கொழும்பு.

(1) 1. கல்வி உடை 2. உணவு 3. உணவு, வாடகை 4. 1000/=

(2) 1. 3, 2. 1, 3. 5, 4. 22

(3) 1. இந்திரன் 2. சபீனா 3. 52kg 4. 4kg 5. 1 ஆண்டு

(4) 1. 3, 2. 4, 3.1, 4.3

(5) 1. இரவு 10 மணி 2. ரூபா 8.00 3. 5 4. 8

(6) 1. 2, 2.2, 3.3 (புதன் என கருதுக)

(7) 1. 2, 2.2, 3.1, 4.1

(8) 1. இல்லை 2. ஆம் 3. ஆம்

(9) 1. 1, 2.2, 3.1

(10) B (11) B

(12) A

(13) 1. 120, 2.57, 3. B 4. 1/5

(14) 1. 679 2. பெண். 3. 12 4. ரூபா. 12,522/=

(15) கருத்துடைய வாக்கியங்கள்

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 01

# இந்து நாகரிகம்

திரு. ப.ஜோதிஸ்வரன்- *B.A. Dip. in Edu.* யாழ்.

(இந்து நாகரிகத்தின் விடைக்குறிப்புகள் பகுதி II 04.042006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவந்திருந்தன. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றன.

*ஆ) ★ பல்லவர் காலத்தில் சிறப்பு பெற்றது.*
*★ தமிழ் நாட்டில் செங்கல் மாவட்டத்தில் உள்ளது.*
*★ மாமல்லன் காலத்தில் சிறப்புப் பெற்றது.*
*★ குகைக் கோயில்கள், மலைத்தனிக் கோயில்கள் பற்றிய விளக்கம்*

*இ) ★ திருவருளின் பயனை விதந்துரைப்பது*
*★ ஆசிரியர் - உமாபதி சிவாச்சாரியார்*
*★ 10 அதிகாரங்கள் - 100 குறட்பாக்கள்*
*★ சைவ சித்தாந்தக் கருத்துக்கள்*

*ஈ) ★ அறம்…………*
*★ பொருள் ………..*
*★ இன்பம் …………*
*★ வீடு ………… பற்றிய விளக்கம்*

*உ) ★ வாழ்க்கை நெறி, அரசியல், சமய நெறி, இலக்கிய மரபு பற்றிய கருத்துக்கள்*

*(முற்றும்)*

கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தொ.பே. இல. 0714273035, 0714220008

**கல்விச்சுடர்**
***உதயன் பணிமனை,***
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## அன்பு மாணவர்களே!

இலங்கையின் கல்வியில் தலைசிறந்து விளங்கும் மாவட்டங்களின் முன்னணி ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாளும், விடைகளும் உங்கள் பரீட்சை நலன் கருதி இங்கு வெளிவருகின்றன. அந்தவகையில் எதிர் வரும் வாரங்களிலும் தலைசிறந்த ஆசிரியர்களின் பரீட்சை எதிர்பார்ப்புடன் கூடிய வினாத்தாள்களும் வெளிவரவுள்ளன. அத்துடன், எமது கல்விச் சுடரினால் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கும் பிரபல ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்களும் எதிர்வரும் காலங்களிலும் இப்பகுதியில் பிரசுரிக்கப்படவுள்ளன. பரீட்சை நடைபெறும் திகதி வரை எம்மால் வெளியிடப்படும் பல வினாத்தாள்களில் பல ஆசிரியர்களின் வேறுபட்ட வினா "வியூகங்கள்" அமைந்திருப்பதால் இப்பகுதியில் வெளிவரும் வினாக்களில் பெரும்பாலானவை இறுதி அரசப்பரீட்சைகளின் வினாக்களாக வெளிவரும் என்பதில் கல்விச்சுடர் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே மாணவர்களே! உங்கள் சிறந்த பெறுபேறுகளுக்காகக் கல்விச்சுடருடன் இணைந்திருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org